பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 20 செவ்வாய்க்கிழமை 06.10.2020 கதிர் 331

### இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்குமாகாணசபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் நேற்று மதியம் அலுவலகத்துக்கு வந்திருந்தார்.

தமிழரசுக்கட்சிதொடர்பாக இப்பத்தியில் எனது விமர் பக்கம்02

# மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் மையங்கொண்டு தாண்டவமாடும் கொரோனா

## மேலும் 101 பேர் தொற்றுடன் அடையாளம்

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த மேலும் 101 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

159 பேரிடம் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைமூலம் 69 பேருக்கு வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. நேற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 32 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி நேற்றிரவு 11 மணிவரையில் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா பரவலால் 101 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது. பக்கம் 02

## பொலிஸாரின் விடுமுறை ரத்து!

அனைத்துத் தர நிலைகளிலும் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுப்பு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

நாட்டில் கோரோனா பரவல் நிலைமை காணப்படுவதால் சட்டம் – ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் வகையில் அனைத்துத் தர நிலைகளிலும் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதனால் விடுவிப்பில் உள்ள உத்தியோகத்தர்கள் உடனடியாகக் கடமைக்குத் திரும்ப வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் கம்பஹா மாணவர்கள் தனிமைப்படுத்தல்

### 9 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு

கம்பஹா மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்மைய நாள்களில் வருகைதந்த 9 மாணவர்களின் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரியால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டம் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று பரவியுள்ளது. இந்தநிலையில், கம்பஹா மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து யாழ்.பல்கலைக் கழகத்துக்கு பக்கம் 02

## நிலைமை மிக மோசம்!

### எச்சரிக்கிறது அரச மருத்துவ அதிகாரிகள்

மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பெண்ணுக்கு எவ்வாறு தொற்றுஏற்பட்டதுஎன்பது இனங் காணப்படாமை மிகவும் பாரதூரமானதாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அழுத்கே தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு பக்கம் 02

## புங்குடுதீவுப் பெண் பயணம் செய்த பஸ்ஸின் சாரதி, நடத்துநர் சுய தனிமைப்படுத்தலில்!

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்ணுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர் புத்தளத்திலிருந்து கொடிகாமம் வரை பயணித்த பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான இ.போ.ச. பஸ்ஸின் சாரதி, நடத்துநர் ஆகிய இருவரும் சுயதனிமைப் பக்கம் 02

## எந்த நேரத்திலும் ஊரடங்கு வரும்!

### மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் எந்த நேரத்திலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்த நேரிடலாம்.

– இவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது: – பக்கம் 02

## இன்று ஊரடங்கு இல்லை!

### ஊடகச் செய்திகளை மறுத்தது அரசு

நாடு முழுவதும் இன்று ஊரடங்கு உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள் ளது என்று சமூக ஊடகங்களில் பக்கம் 02

## மாதகல் கடற்படை விடுதியில் 16 பேர் தனிமைப்படுத்தலில்!

யாழ்ப்பாணம், மாதகல் கடற்படை விடுதியில் தங்கியுள்ள சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட 16 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையின் மேற்பார்வையாளர் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது அவரைக் கவனித்து வந்த தாதி தனது குடும்பத்தினருடன் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்துள்ளார்.

அவர் தங்கியுள்ள மாதகல் கடற்படை பக்கம் 02

## நாடு மீண்டும் முடங்குமா? நிலைமைக்கேற்ப முடிவு

### தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு. ஒக். 07

நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்படுமா என்பது குறித்து எதிர்வரும் தினங்களில் காணப்படும் நிலைவரங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

– இவ்வாறு தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார். (விவரமான செய்தி 11ஆம் பக்கத்தில்)

## மைத்திரியை 7 மணிநேரம் குடைந்தது ஆணைக்குழு!



இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு பக்கம் 02

## 20 இற்கு எதிரான மனுக்கள் மீதான பரிசீலனை நிறைவு!

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 39 மனுக்கள் மீதான சமர்ப்பணங்கள் உயர்நீதிமன்றில் நிறைவடைந்துள்ளன.

20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, பக்கம் 02

## கிழக்குப் பல்கலை மாணவர்கள் 16 பேர் கட்டாய சுய தனிமையில்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் கம்பஹா மாவட்ட மாணவர்கள் 16 பேர் கட்டாய சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஏ. லதாகரன் தெரிவித்தார். பக்கம் 02

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனங்கள் குறித்து அதிருப்தியின் உச்சத்தில் இருந்தார். தமக்கு எதிராக எதுவும் எழுதப்பட்டதாக அவரின் குற்றச்சாட்டு அமையவில்லை. மாறாக, இரண்டு விடயங்களை அவர் முன்வைத்தார்.

ஒன்று – இப்பத்தியில் அதிகம் தமிழரசு குறித்துத்தான் விமர்சிக்கிறேன் என்பது அவரின் முதல் அவதானிப்பு.

மற்றது – அவரது கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை அதிகம் – அளவுக்கு மீறி – தேவையில்லாமல் வைகிறேன் என்பது அடுத்த கவனிப்பு.

அவரது ஆதங்கங்களை எந்தக் குறுக்கீடும் செய்யாமல் அவர் கொட்டித் தீர்க்க இடமளித்து, முற்றாக செவிமடுத்தேன். பின்னர் ஆற அமர இருந்து அவரது இரண்டு அவதானிப்புகளுக்கும் எனது கருத்தைத் தெரிவித்தேன்.

இலங்கைத் தமிழரசுதான் மூத்த கட்சி. அதிகம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டது. கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியும் கூட. தாங்களே ஏகப்பிரதிநிதித்துவம் கொண்டவர்கள் என்று கடந்த ஓகஸ்ட் வரை கூட்டமைப்பினரே கூறி வந்தனர். பிரதான கட்சிதான் அதிகம் விமர்சனத்துக்கு உள்ளாகும். அது தவிர்க்க முடியாதது. காய்த்த மரம் மீதுதானே கல்லெறி விழும் என்றேன் நான்.

அது மட்டுமல்லாமல், தமிழினம் இப்போது பெரும் இக்கட்டில் உள்ளது. தமிழினத்தை நெறிப்படுத்தவேண்டிய பிரதான பொறுப்பை கூட்டமைப்பின் மீதும் அதன் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசின் மீதும்தான் வரலாறு சுமத்தியுள்ளது. அதனால் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் பார்வை அதன்மீது விழுவது தவிர்க்க முடியாதது என்று நியாயப்படுத்தினேன் நான்.

என் விளக்கத்தை அவர் ஒப்புக்கொண்டார். அடுத்து அவரின் கட்சியின் தலைவரின் நிலைமை பற்றியது.

மாவை சேனாதிராசா வெறுமனே ஒரு கட்சித் தலைவர் மட்டுமல்லர், ஒரு வரலாற்றுத் திருப்பு முனையில் நிற்கும் மக்கள் கூட்டத்தின் இயங்கு சக்தியை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பை அவர் ஏற்றிருக்கின்றார். அதை உணர்ந்து அவர் செயற்படுபவராக இல்லை என்ற என் கணிப்பை சி.வீ.கே.சிவஞானம் அவர்களுக்கு உணர்த்தினேன்.

இன்றைய கட்டத்தில் அவர் சராசரி அரசியல்வாதியாக செயற்படக்கூடாது, செயற்பட முடியாது என்றேன் நான். 'தான்', 'தனது', 'தன்னைச் சூழ்ந்தவர்கள்', 'தனக்குரியவர்கள்' என்ற வட்டத்தை விட்டு வெளியே வந்து, தந்தை செல்வா போன்ற உயரிய நிலையில் செயற்பட வேண்டியவர், ஆனால் மூன்றாம் தர அரசியல்வாதி போலவே குறுகிய பார்வையில் காரிய மாற்றுகின்றார் என்ற என் மனப்பதிவைக் கொட்டினேன். அவற்றை சிவஞானம் மறுத்தார்.

இப்போதும் கூட, பத்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை உங்களைப் போன்றோரின் (சிவஞானம் போன்றோரின்) உதவியுடன் ஒன்றிணைக்கக்கூடிய வலிமை நிலையில் – முக அடையாளம் கொண்ட தலைவராக – அவர்தான் (மாவைதான்) இருக்கின்றார் என்று விவரித்தேன் நான்.

இதைக் கூட, மீண்டும் தனது தனிப்பட்ட பதவி ஆசையான வடக்கு மாகாண முதலமைச்சர் என்ற இலக்கை வைத்துத்தான் அவர் நகர்த்துகின்றாரோ என்ற சந்தேகம் எனக்கு உட்படப் பலருக்கு உண்டு என்று வெளிப்படையாகக் கூறினேன் நான். இல்லை என்று மறுத்தார் சிவஞானம்.

கட்சிக்குள் அரவணைத்து முன்நகர்த்த வேண்டிய பலரை தள்ளி வைத்து விட்டு, தேவையற்ற – விபரீதமான – பலரை சூழ வைத்திருக்கின்றார், கட்சியை இளைஞர்களிடம் – நியாயமாகச் செயற்படக் கூடியவர்களிடம் – எடுத்துச் செல்லாமல், செல்லாக் காசுகளைச் சூழ வைத்துக் கொண்டு தந்தை செல்வாவும், தளபதி அமிரும், ஏனையோரும் கட்டி வளர்த்த கட்சியைத் துருப்பிடிக்க வைத்து விடுவாரோ என்ற என் அவதானிப்பை வெளியிட்டேன்.

எல்லாவற்றையுமே அடியோடு நிராகரித்தார் சிவஞானம்.

*"நடந்தவற்றை மறந்து விடுங்கள், இக்கட்டு நிலையிலிருந்து தமிழர்களையும், தமிழினத்தையும் ஒற்றுமைப்படுத்தி முன் நகர்த்துவதற்கு தமிழரசுத் தலைவருக்கு ஒரு மூத்த பத்திரிகையாளர் என்ற முறையில் உங்கள் பங்களிப்பையும் வழங்குங்கள். கட்சியின் உள்வீட்டு விவகாரங்களுக்குள் அதிகம் நுழைந்து கட்சியைப் பலவீனப்படுத்த இடமளியாதீர்கள்."* – என்று கோரிக்கை வைத்தார் அவர்.

நான் ஒப்புக்கொண்டேன். தேவையில்லாமல் கட்சியையும் தலைவரையும் விமர்சிக்கவோ கீழ்மைப்படுத்தவோ போவதில்லை என்றேன் நான்.

தமிழரசுக் தலைமையும், தமிழரசும் மீண்டும் உயிர்ப்புடனும் உத்வேகத்துடன் தமிழ் மக்களுக்கு பணியாற்றினால் அதுவே மகிழ்ச்சியான விடயம். தவறானவர்களை – தரப்புகளை – முன்னிலைப்படுத்தாமல் பணியாற்றும் தமிழரசை நான் உட்பட எல்லோரும் உரிமையுடன் எதிர்பார்க்கிறோம். இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் அர்ப்பணிப்புச் செய்தவர்களை – அர்ப்பணிக்கத் தயாராக இருந்தவர்களை – மதியுங்கள் என்று என் வேண்டுகோளை அவரிடம் முன்வைத்தேன்.

என் கருத்து – பதில் குறித்த – வாசகர்களே, நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்....?

– மின்னல் –

## நிலைமை மிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: –

இலங்கையில் இதுவரையில் இனங்காணப்பட்ட நோயாளர்களில் அவர்களுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பதை இனங்காணக்கூடியதாக இருந்தது. ஆனால் இந்தப் பெண்ணுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது இதுவரையில் இனங்காணப்படவில்லை.

எனவே அவருக்கு சமூகத்திலிருந்து தொற்று ஏற்பட்டிருக்கக் கூடும் என்று எம்மால் கற்பனை செய்ய முடியும். இது பாரதூரமானதாகும்.

அவர் தொழில் புரிந்த ஆடை தொழிற்சாலையில் சுமார் 1,700 பேர் தொழில் புரிகின்றனர். 1,700 தொழிலாளர்களைக் கொண்ட இந்த தொழிற்சாலையில் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டனவா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஒவ்வொரு பிரிவுகளிலும் தொழில் புரிபவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படாததால் 1,700 பேருக்கும் அச்சுறுத்தல் நிலைமையே உள்ளது.

குறித்த பெண் தொழில் புரிந்த ஒரு பகுதியில் மாத்திரம் – அதாவது அவருடன் நேரடியாக தொடர்புகளைப் பேணியவர்கள் – 783 பேர் ஆவர். இது கந்தக்காடு பிரதேசத்தில் ஏற்பட்ட நிலைமை விட பாரதூரமானதாகும்.

கணிப்பீடுகளின் அடிப்படையில் பார்க்கும் போது 99 இல் 69 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்றால் இது மிகவும் மோசமான நிலைமையாகும். எஞ்சியுள்ள 1,600 பேரில் எத்தனை பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்படும்? இவர்கள் அனைவரும் நாடளாவிய ரீதியில் பரவலடைந்துள்ளனர்.

மினுவாங்கொடை பகுதியிலுள்ளவர்கள் மாத்திரம் இங்கு தொழில் புரியவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த பெண்ணுடைய சொந்த இடம் மினுவாங்கொடை அல்ல. ஹபராதுவை அவரது சொந்த இடமாகும். எனவே மினுவாங்கொடை என வரையறுக் காமல் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும். – என்றும் கூறினார்.

## இன்று ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பப்படும் தவறான செய்திகளால் மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மக்களைத் தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அல்லது அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்ற விசேட ஊடக அறிக்கை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் மாத்திரம் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 20 இற்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர்கள் புவனகே அளுவிகார, சிசிர டி அப்ரூ, பிரியந்த ஜயவர்த்தன, விஜித் மலல்கொட ஆகிய ஐவர் கொண்ட அமர்வு முன் இந்த மனுக்கள் மீதான சமர்ப்பணங்கள் கடந்த 29ஆம் திகதி தொடக்கம் முன்வைக்கப்பட்டன.

20ஆவது திருத்த சட்ட வரைவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் 39 மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

20ஆவது திருத்தச் சட்ட வரைவில் அடிப்படை முரண்பாடுகள் இருப்பதால் அதனை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரம் போதாது. அதனால் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும் என்று மனுக்களில் கோரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## எந்த நேரத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் நாட்டில் எந்த நேரத்திலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்த நேரிடலாம் என்பதால் மக்கள் எந்த வேளையிலும் தயாராக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எனவே, மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை சேர்த்து வைத்திருக்கும் வரை ஊரடங்குச் சட்டம் காத்திருக்காது.

கொரோனா வைரஸ் தொற்றானது கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் மட்டுப்பட்டிருக்கும் அல்லது அந்த எல்லையைத் தாண்டி அருகிலுள்ள பிரதேசங்களுக்கு மாத்திரம் வந்திருக்கும் என்றும் கூறமுடியாது.

சில வேளைகளில் தத்தமது பிரதேசங்களிலும் பரவியிருக்கலாம் என்பதால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் – என்றார்.

(மற்றொரு செய்தி 12 ஆம் பக்கத்தில்)

## மாதகல் கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதியில் தங்கியிருந்த 16 பேரே தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## மினுவாங்கொடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் நால்வர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். அதில் ஒருவர் யாழ்ப்பாணம் – புங்குடுதீவைச் சேர்ந்த பெண் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றிருவர் குருநாகலைச் சேர்ந்தவர்கள்.

திவுலுப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் மற்றும் அவருடைய மகள் கொரோனாத் தொற்றுடன் கண்டறியப்பட்டதை அடுத்து அந்தப் பெண் பணிபுரிந்த ஆடைத்தொழிற்சாலை பணியாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 513ஆக அதிகரித்துள்ளது. இதில் 3 ஆயிரத்து 259 பேர் குணமடைந்துள்ளனர். 241 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

## யாழ்.பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தந்த 9 மாணவர்கள் அவர்கள் தங்கியுள்ள இடங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களின் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவர்களின் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை இன்று செவ்வாய்க்கிழமையே கிடைக்கப்பெறும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பஸ்ஸின் சாரதி,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

அத்துடன், பருத்தித்துறை பஸ்ஸில் பயணித்தவர்கள் சமூகப் பொறுப்புடன் தம்மையும் சமூகத்தையும் காக்க முன் வந்து இனங்காட்டுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கொரோனா பாதித்த புங்குடுதீவுப் பெண் கொழும்பிலிருந்து பயணித்த பஸ், புத்தளம் பகுதியில் பழுதடைந்துள்ளது. அதனால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 12.30 புத்தளம் பகுதியிலிருந்து அந்தப் பெண் பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான இ.போ.ச. பஸ்ஸில் பயணித்துள்ளார். அவர் கொடிகாமத்தில் காலை 4.30 இறங்கியுள்ளார்.

பின்னர் வேறொரு பஸ்ஸில் அந்தப் பெண் யாழ்ப்பாணம் நகருக்குப் பயணித்துள்ளார்.

கொழும்பு – பருத்தித்துறை சேவையில் ஈடுபட்ட இ.போ.ச. பஸ்ஸில் பணியாற்றிய சாரதி மற்றும் நடத்துநர் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் இனங்காணப்பட்டு கட்டாய சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, அந்த பஸ்ஸில் பயணித்தோர் உடன் தன்னார்வமாகத் தங்களை வெளிப்படுத்தி வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் 021 222 6666 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## மைத்திரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில் நேற்று ஆஜரானார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அவர் அங்கு ஏழு மணி நேரம் வாக்குமூலம் வழங்கிவிட்டு வெளியேறியுள்ளார்.

அவரை மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று செவ்வாய்க் கிழமை குறித்த ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## கிழக்குப் பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ பீடத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கும் 16 மாணவர்கள் நீண்ட விடுமுறைக்குப் பின்னர் தற்போது பல்கலைக்கழகத்துக்குத் திரும்பியுள்ளனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அவர்களை அவர்களின் விடுதியிலேயே தங்க வைத்து அதிகாரிகள் சுய தனிமைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அத்தோடு நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச சூழ்நிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

# சுகாதார நடைமுறையை பின்பற்றுமாறு யாழ்.மக்களுக்கு பொலிஸ் அறிவுறுத்து





யாழ்ப்பாணம், ஒக்.06

யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலைமை தொடர்பில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

மினுவாங்கொட பகுதியில் ஆடைத் தொழிற்சாலையொன்றில் கடைமையாற்றுபவருக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. அந்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியவர்கள் இருவர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்கள். அவர்கள் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் அவர்களோடு தொடர்புபட்டவர்களைத் தனிமைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். எனினும் மக்கள் கொரோனாவில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சுகாதார நடைமுறைகளைப்பின்பற்றி பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் மற்றும் முடக்கம் ஏற்பட்டால் பொதுமக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். எனவே அதற்கு முன்னேற்பாடாக பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கொரோனாத் தொற்று ஏற்படாதவாறு தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

குறிப்பாக வீடுகளை விட்டு வெளியில் வரும்போது முகக் கவசங்களை அணிந்து, கைகளை நன்றாக கழுவி, சமூக இடைவெளியைப் பின்பற்றுவதன் மூலம் குறித்த கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். மேலும் தனியார் மற்றும் அரச பஸ்களில் இருக்கை மட்டத்திற்கு பயணிகளை ஏற்றுமாறும் சாரதி நடத்துநர்களை அவர் அறிவுறுத்தினார்.

# பெரும்பான்மையினர் எடுக்கும் தீர்மானம் ஜனநாயகம் அல்ல!

## மஹிந்த தேசப்பிரிய கருத்து



பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்கள் தான் ஜனநாயகம் என்று பலர் நினைக்கிறார்கள். சிறு தொகையினராக உள்ளவர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் நிகழாத விதத்தில் பெருந்தொகையானவர்களின் விருப்பத்துக்கு இணங்க ஏற்படுத்தப்படும் ஜனநாயகமே உண்மையான ஜனநாயகம் என்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று (திங்கட்கிழமை) விஜயம் செய்த அவர் இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

ஜனநாயகத்துக்கு இளைஞர்கள் தேவை. இளைஞர்களுக்கு ஜனநாயகம் தேவை. தற்போது ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுபவர்கள் எங்களைப்போன்ற வயது முதிர்ந்தவர்களாகவும் அல்லது காலாவதியானவர்களாகவுமே இருக்கின்றனர். ஆதைப் பற்றிப் பேசுவதற்கு தேவையானவர்கள் இளைஞர்களே.

யேசுவும், நபியும், புத்தனும் இளைஞர்களாக இருந்தபோதே தமது சமயப் பணிகளை மேற்கொண்டனர். இந்து மதத்திலும் அவ்வாறு இருக்கிறது. இப்படியிருக்கும்போது இளைஞர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று எப்படி நாங்கள் கூறமுடியும்.

உங்களது இதயத்தில் ஜனநாயகம் சமத்துவம் தொடர்பாகத் தீப்பொறி ஒன்று எரிந்துகொண்டே இருக்கும். அவை ஒன்றிணைந்து எரிமலை சுவாலையாகும். அது வன்முறை எரிமலையாக மாறக்கூடாது. அது ஜனநாயகத்தை நோக்கிச்செல்கின்ற அமைதியான எரிமலையாக மாறவேண்டும்.

எனவே இளைஞர்களை ஜனநாயகம் நோக்கி ஈர்த்தெடுக்கவேண்டும். அவர்களும் தங்களது பங்களிப்பை ஜனநாயகத்துக்கு வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்கள் தான் ஜனநாயகம் என்று பலர் நினைக்கிறார்கள். உண்மையான ஜனநாயகம் என்பது சிறு தொகையினராக உள்ளவர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் நிகழாத விதத்தில் பெருந்தொகையானவர்களின் விருப்பத்திற்கு இணங்க ஏற்படுத்தப்படும் ஜனநாயகமே உண்மையான ஜனநாயகம் .ஆட்சியில் மாத்திரமல்ல சாதாரணமாக ஒரு மரணசங்கங்களில் கூட பெருந்தொகையினர் சிறுதொகையினரது உரிமைகளை நசுக்கி செயற்படும் விதத்தை நாம் காண்கின்றோம்.

பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கேற்ப ஆட்சி நடைபெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டிருப்பதே மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பெரும் தடைக்கல்லாக அமைந்திருப்பதுடன், அந்தநாடுகள் முன்னேறமுடியாமல் தவிப்பதற்கும் காரணமாகின்றது.

உதாரணமாக 5 பேரைக்கொண்ட குடும்பத்தில் மூவர் சோற்றையும், இருவர் பாணையும் விரும்பி உண்பவர்களாக இருப்பர். அங்கு நாம் தேர்தலை நடாத்தினால் சோற்றினை விரும்புபவர்களே வெற்றி பெறுவர். ஆனால் பாண் உணவை விரும்பி உண்பவர்களின் விருப்பம் அங்கு மறுதலிக்கப்படுகின்றது. ஆதலால் தேர்தலின் மூலம் மாத்திரம் ஜனநாயகத்தை தேர்தெடுக்க முடியாது.

எனவே சிறுபான்மையினருக்கு எவ்விதமான பாதிப்பும் நிகழாத விதத்தில் பெருந்தொகையானவர்க ளின் விருப்பமே உண்மையான ஜனநாயகம் எனலாம்.

அதுபோல மொழியையும் அதற்கு உதாரணமாக எடுக்க முடியாது. 15 சதவீதமாக தமிழர்கள் வசிக்கும் இரத்தினபுரியில் சிங்களத்தில் மாத்திரம் சுற்றுநிருபங்களை அனுப்புவதும் அதுபோல, சிறுதொகையினராக உள்ள முல்லைத்தீவு வெலிஓயாவில் வசிக்கும் சிங்கள மக்களுக்கு தமிழில் கடிதங்களை அனுப்புவதும் சரியாகாது.

எனவே நாம் ஆற்றும் ஒவ்வொரு பணியும் இரகசியமாகவும், அந்தரங்கமாகவும் இல்லாமல் பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் இருக்கவேண்டும். எமது கருத்துக்களில் பல்லினத்தன்மை இருக்கவேண்டும். இதற்காகவே தேர்தல் திணைக்களத்துக்குப் பதிலாக தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட்டது.

அதன்மூலம் தனிநபரது கருத்துக்குப் பதிலாக மூன்றுபேர் கொண்ட அங்கத்தவர் குழு நியமிக்கப்பட்டது. பல்வேறுபட்டவர்கள் இருக்கும் போதே பல கருத்துக்கள் வரும். ஒரு வர்ணத்தால் தீட்டப்படும் ஓவியம் அழகாக இருக்காது. – என்றார்

# யாழ் நகரில் இந்தியா கட்டிய கலாசார மண்டபம் இருளில்!

## கட்டண நிலுவையால் மின் துண்டிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.06

யாழ். நகரில் இந்தியாவின் நிதி உதவியில் யாழ். மாநகர சபைக்காக சுமார் 250 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் மிக உயர்ந்த கலாசார மண்டபத்தின் மின்சாரக் கட்டணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்து மின் இணைப்பை இலங்கை மின்சார சபை துண்டித்துள்ளது.

கலாசார மண்டபத்திற்கான கட்டுமானப் பணிகள் இடம்பெற்ற சமயம் மின்சாரக் கொடுப்பனவை யாழ்ப்பாணம் மாநகர சபையே செலுத்தி வந்த நிலையில் அந்தக் கட்டுமானதிற்கான ஒப்பந்தத்தின் பிரகாரம் அது சரியான முறைமையா எனக் கேள்வி எழுப்பப்பட்டு வந்தது. அதேநேரம் பணி இடம்பெற்ற காலத்தில் ஆயிரக் கணக்கான ரூபாக் கட்டணமாக வந்த மின் சிட்டை அண்மை மாதமாக லட்சக் கணக்கான ரூபாவுக்கு எகிறியுள்ளது. இதனால் இக் கொடுப்பனவை செலுத்தமுடியாது சபைநிதிநெருக்கடிக்கு இலக்கானது.

இதன் காரணமாக சிட்டை நிலுவை 16 லட்சம் ரூபாவைத் தொட்ட நிலையில் கடந்த வாரம் இலங்கை மின்சார சபை கலாசார மண்டபத்திற்கான மின் இணைப்பை துண்டித்துள்ளதனால் மேற்படி கட்டடம் இருளில் மூழ்கியுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் உரிய முறையில் இன்னும் மாநகரசபையிடம் கையளிக்கப்படாமல் இருளில் இருப்பதனால் மின்சாரக் கருவிகள், இணைப்புக்கள் என்பன் எலி போன்றவற்றின் கைவரிசைக்கு உட்படக் கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

# இளைஞர் ஜனநாயகம் என்ற தலைப்பில் கலந்துரையாடல்!

## வவுனியாவில் நேற்று

இளைஞர்வலையமைப்பின்(அப்ரியல்) நிறுவனத்தின் ஏழாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனநாயகத்தை பாதுகாக்கும் மற்றும் சுதந்திரமானதும் நியாயமானதேர்தலுக்கான இளையதலைமுறைக்கான செயற்பாடுகள் எனும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் நிகழ்வு நேற்றுக் காலை வவுனியா தவசிகுளத்தி லுள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை அதிதியாக தேசிய தேர்தல் ஆணையாளர் மஹிந்ததேசப்பிரிய கலந்துகொண்டமையுடன், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், முன்னாள் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.முகமட், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பொ்னாண்டோ மற்றும் வன்னிமாவட்டங்களைச் சேர்ந்த உதவித்தேர்தல்கள் ஆணையாளர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் தேர்தல் முறைமை மற்றும் தேர்தல் சட்டங்கள், கண்காணிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகத்திறந்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டமையுடன், இளைஞர்களின் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் தேர்தல் ஆணையாளர் மற்றும் அதிகாரிகளால் பதில்கள் வழங்கப்பட்டிருந்தன.

# பண்டாரநாயக்க விமான நிலையத்தின் சில பகுதிகள் மறு அறிவித்தல்வரை பூட்டு!

கொழும்பு, ஒக்.06

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சில பகுதிகள், மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை தரும் மற்றும் வெளியேறும் பிரதேசங்கள், பொதுமக்கள் பார்வையிடும் கலரி ஆகியவை மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என இலங்கையின் விமான நிலைய விமான சேவைகள் பணிப்பாளர் ஜஹான் சுமணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக ஜஹான் சுமணசேகர மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தீர்வையற்ற வர்த்தகக் கடைகளுக்குப் பயணிகளை அனுமதிப்பதும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்குள் வந்துள்ளவர்கள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்களிலுள்ளவர்களுக்கும் பொருந்தும்.

அத்துடன், விமானநிலையத்தில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடலொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜனநாயகம் எனும் கேலிக்கூத்து

**எண்ணிக்கையின் பெயரில் நடக்கும் கேலிக் கூத்துத்தான் ஜனநாயகம் என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்துள்ளோம்.**

**அநீதியான – நீதிக்கு மாறான – விடயங்களையும் பிழையான நெறிமுறையில் நியாயப்படுத்தும் ஓர் அநியாய மார்க்கமே ஜனநாயகம் என்று அர்த்தப்படுத்தப்படுகின்றது என்றும் குறிப்பிட்டு வந்தோம்.**

**சரியான நெறிமுறையற்ற மார்க்கத்தை, வேறு வழியின்றி உலகம் உயரிய பாதையாக ஜனநாயகம் என்று காட்டுகின்றது என்பதை நாம் அவதானிக்கத் தவறி வருகிறோம்.**

**பெரும்பான்மையின் விருப்பும், திணிப்பும் நீதிமுறையின் பாற்பட்டதாக இல்லாமல் இருக்கலாம். பல சமயங்களில் அப்படித்தான் இருக்கின்றது. ஆனால் அத்தகைய பெரும்பான்மையினரின் அநீதியான தீர்மானத்தையும் முடிவையும் ஜனநாயகத்தின் அடிப்படையில் நீதியானதாக உலகம் காட்ட முயல்வதால்தான் பல இடங்களில் தீவிரவாதம் பிறப்பெடுக்கின்றது. அதை உலகம் 'பயங்கரவாதம்' என்று விமர்சிக்கின்றது.**

**வெறுமனே பெரும்பான்மையினரின் முடிவுதான் – தீர்மானம் தான் – உயர்ந்தது என்ற மிகத் தவறான கருத்தியல் நிலையில் பிறந்த ஜனநாயகம்தான் உலகில் பல தேசங்களின் அழிவுகளுக்கும், பின்னடைவுகளுக்கும் காரணமாக உள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மை.**

**ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்கான மார்க்கங்கள் சரியானவையாக இல்லாத போதுதான் ஜனநாயகம் சரிவடைகின்றது என்ற கூற்று – விளக்கம் – சில தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றது.**

**ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் பிரதான வழி முறையான தேர்தல் முறைமைகள், வாக்களிப்பு மார்க்கங்கள், பிரசார நடவடிக்கைகள் போன்றவை தவறான பாதையில் நடக்கின்றமையால் ஜனநாயகம் சீரழிந்து விடுகின்றது என அவர்கள் கூறுகின்றனர்.**

**இந்தியா போன்ற நாடுகளில் – ஏன் அண்மைக் காலமாக நமது நாட்டிலும் கூட – ஜனநாயகத்தை நிலைநிறுத்தும் தேர்தல் முறைகளின் சீரழிவு நிலைமையை நோக்கும் போது அவர்களின் கூற்றில் நியாயம் இருப்பது போலவே தோற்றுகின்றது. அது மறுக்க முடியாத உண்மைதான்.**

**ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் தேர்தல் முறைகள் சீரழிவுக்குரியனவாக இருக்கும் போது ஜனநாயகமும் சீரழிவது தவிர்க்க முடியாததுதான்.**

**ஆனால், இதையெல்லாம் விட ஜனநாயக முறை என்பதே – பெரும்பான்மையினரின் முடிவே தீர்மானம் என்ற முறைமையே – அடிப்படைக் கோட்பாட்டியல் சிந்தனையில் நோக்கினால் ஒரு வலது குறைந்த மார்க்கம்தான்.**

**சில சமயங்களில் உலகில் உள்ள ஆட்சி முறைமைகள், கோட்பாட்டியல்களில் உள்ளதில் வள்ளிசாக – தேர்ந்ததாக – இதைக் கருத முடியும் என்றாலும், ஜனநாயகம் என்பதே கோட்பாட்டியல் ரீதியில் ஒரு நொண்டி வாத்துத்தான்.**

**இலங்கையில் ஜனநாயகத் தேர்தல்களை நடத்தும் தேர்தல் ஆணையத்தின் தலைவரே – ஜனநாயக ஆலயத்தின் பிரதான பூசகரே – இதனை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு கருத்து வெளியிட்டிருக்கின்றார்.**

***"பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்கள் தான் ஜனநாயகம் என்று பலர் நினைக்கின்றார்கள். சிறு தொகையினராக உள்ளவர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் நிகழாத விதத்தில் பெரும் எண்ணிக்கையானோரின் விருப்பத்துக்கு இணங்க ஏற்படுத்தப்படும் ஜனநாயகமே உண்மையான ஜனநாயகம்."*** **என்று கூறுவதன் மூலம் நொண்டும் ஜனநாயகக் கோட்பாட்டைச் சமாளித்து நியாயப்படுத்த முயல்கின்றார் தேசியத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.**

**அவர் கூறுவது நீதி, நியாயம் என்றும் சொல்லலாம். ஆனால் அவர் கூறும் நீதியையோ, நியாயத்தையோ நிலைநிறுத்தும் பண்பியல் கடப்பாடும் எதுவுமே இல்லாத விடயத்தைத்தான் அவர் உட்பட இலங்கையும், உலகமும் ஜனநாயகம் என்று போற்றிப் புகழ்ந்து நடைமுறைப்படுத்துகின்றன என்பதும் மறுக்கப்பட முடியாத யதார்த்தமாகும்.**

**வவுனியாவில் ஒரு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார். அதிலும் இன்னும் ஒரு வேடிக்கை உண்டு. அவர் 'ஜனநாயக சமத்துவம்' பற்றியும் பேசியிருக்கின்றார். பெரும்பான்மையினரின் அநியாய முடிவையும் சிறுபான்மையினர் மீது வல்வந்தமாகத் திணிக்கும் பண்பியல்பு கொண்ட ஜனநாயகத்தில் சமத்துவத்துக்கு ஏது இடம்?**

**ஜனநாயகத்தின்பால் இளைஞர்கள் ஈர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகின்றார். நல்லது. பெரும்பான்மையினரின் தீர்மானம் நீதி, நியாயமானதாக இருந்தால் மட்டுமே செல்லுபடியாகும் என்பதை ஜனநாயகம் வரையறை செய்து உறுதிப்படுத்தாத வரை ஜனநாயகம் செழுமை பெறுவதும், மக்கள் அதன் மீது முழு நம்பிக்கை வைத்து அதன்பால் ஈர்க்கப்படுவதும் வெறும் வாய்ப்பந்தல் பேச்சுதான்!**

## திலீபனின் போராட்டம் சமூக விடுதலைக்கானது அதற்கான கௌரவத்தினைக் கொடுக்கின்றோம்!

### என்கிறார் அரச ஆதரவு அமைச்சர் வியாழேந்திரன்



தியாகி திலீபனின் போராட்டம் ஒரு சமூகத்தின் விடுதலைக்கான போராட்டம் எனவும் அதற்கான கௌரவத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரித்துள்ளார்.

அத்துடன், தியாகி திலீபனின் அஹிம்சை வழிப் போராட்டத்தை தாங்கள் ஒருபோதும் கொச்சைப்படுத்தியமை கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) மட்டக்களப்பு புளியந்தீவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாங்கள் கடந்த காலங்களில்கூட திலீபனின் அஹிம்சைவழிப் போராட்டத்தை கொச்சப்படுத்தியவர்கள் அல்லர். நாங்கள் அதனை மதித்திருக்கின்றோம்.

இந்த நாட்டிலே இருக்கின்ற தமிழ் மக்கள் ஏனைய சமூகத்துக்கு இணையாக தலைநிமிர்ந்து வாழவேண்டும், யாருக்கும் அடிமையாக இருக்கக் கூடாது என்ற தியாகி திலீபனின் கனவை நனவாக்க நாங்கள் இன்று அரசாங்கத்தோடு இணைந்திருந்து வேலை செய்துகொண்டிருக்கிறோம்.

சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தியாகி திலீபனின் விடயத்தில் நாங்கள் அமைதியாக இருந்தோம் என்பதை குற்றமாகக் கருதுகின்றனர். நாங்கள் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற கடையடைப்பு போராட்டத்தை குழப்பவில்லை. மறுப்பும் தெரிவிக்கவில்லை. – என்று தெரிவித்தார்.

## மீண்டும் ஒத்துழைப்பைத் தாருங்கள் மக்களைக் கோரும் சுகாதார அமைச்சு



கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு கடந்த காலங்களைப் போன்று மீண்டும் ஒத்துழைப்பைத் தாருங்கள் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் பவித்ரா வன்னியாராச்சி மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம், கொரோனா தொற்றை ஒழிப்பதற்காக அதிகம் முக்கியதுவம் வழங்கியமை காரணமாக, ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக கொரோனா ஒழிப்பு விடயத்தில் இலங்கை விளங்கியது. நாமும் கொரோனா தொற்றிலிருந்து விரைவாக மீண்டோம்.

இதேவேளை நேற்று, ஒருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள் ளார். எனவே ஏனையோருக்குப் பரவுவதைத் தடுப்பதற்காக பொதுமக் கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் மக்கள் அனைவரும் சுகாதார வழிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதுடன், அதிக சனநெருக்கடி மிக்க பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்.

மேலும், கடந்த காலங்களில் போன்று மீண்டும் ஒத்துழைப்பை தாருங்கள். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில் ஒருவர் துப்பாக்கிகளுடன் கைது!



வவுனியா, பன்றிகெய்தகுளம் பகுதியில், விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்படும் சட்டவிரோதே துப்பாக்கிகளுடன் ஒருவரை கைது செய்துள்ளனர் என ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பன்றிகெய்தகுளத்தில் வீடொன்றில் சட்ட விரோதமாக துப்பாக்கிகளை (இடியன்துவக்கு) மறைத்து வைத்திருப்பதாக ஓமந்தை பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இந்நிலையில், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் நான்கு சட்டவிரோத துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டமையுடன் அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டு.நகரில் விபத்து; ஒருவர் பலி சந்தேகநபர் விளக்க மறியலில்!

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி சத்துருக் கொண்டான் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில், தன்னாமுனை விபுலானந்தபுரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய ஞானசிங்கம் ஜீவானந்தம் என்பவரே உயிரிழந்தவராவார்.

கொழும்பு – மட்டக்களப்பு பிரதான வீதியில், ஏறாவூர் பகுதில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த காரும் மட்டக்களப்பில் இருந்து ஏறாவூர் பகுதிக்கு பயணித்த மோட்டர்சைக்கிளும் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு, நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது, மோட்டர் சைக்கிள் பயணித்தவர், படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்

இதில் உயிரிழந்தவரின் சடலம், மட்டு. போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், காரை ஒட்டிச் சென்றவரை கைது செய்து, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.சி.ஏ.றிஸ்வான் முன்னிலையில் நேற்று, பொலிஸார் ஆஜர்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 19 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# கினிகத்தேனை பகுதியில் வான் விபத்து; 13 பேர் காயம்!




கினிகத்தேனை – பம்பஹேன பகுதியில் வேன் ஒன்று மண்மேட்டில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் சிகிச்சைகளுக்காக கினிகத்தேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேன நகருக்கு அருகில் உள்ள பம்பஹேன பகுதியில் வைத்தே வேன் வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதுண்டு இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வேனில் 15 பேர் பயணித்துள்ளனர் எனவும், இவர்களில் 13 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன ஆரம்பகட்ட சிகிச்சைகளின் பின்னர் 9 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவில் மரண வீடொன்றுக்கு வந்து அஞ்சலி செலுத்திவிட்டு கம்பஹா பகுதியை நோக்கி மீண்டும் பயணிக்கையிலேயே நேற்று திங்கட்கிழமை காலை 8.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் கினிகத்தேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சாரதிக்கு ஏற்பட்ட தூக்கம் காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

# மஸ்கெலியாவில் முகக் கவசம் கட்டாயம்

மஸ்கெலியா, ஒக்.06

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு பொது மக்களிடம், மஸ்கெலியா பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மஸ்கெலியா நகருக்கு வருபவர்கள் கட்டாயமாக முகக்கவசம் அணியவேண்டும் என்பதுடன், வாகனங்களில்பயனிப்பவர்களும் இந்த நடைமுறை பொருந்தும் எனவும் பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கண்டி கட்டட விபத்தை ஆராய 21 பேர் அடங்கிய பொறியியலாளர்கள் குழு!

கண்டியில் இடம்பெற்ற கட்டட விபத்து தொடர்பான ஆய்வுகளுக்காக 21 பொறியியலாளர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித்யு கமகே தெரிவித்துள்ளார்.

கட்டடங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 2 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த காலப்பகுதியில் சுமார் 20 கட்டடங்களையேனும் ஆய்வுக்கு உட்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர், கண்டி நகரில் மண்சரிவு ஏற்படும் பகுதிகளில் கட்டடங்களை எவ்வாறு நிர்மாணிப்பது என்பது தொடர்பாகத் திட்டங்கள் வகுக்கப்படும் எனவும் ஆளுநர் லலித் யு கமகே மேலும் தெரிவித்துள்ளார்.

கண்டி – பூவெலிகட பகுதியில் கடந்த 20ஆம் திகதி காலை 5 மாடி கட்டடமொன்று இடிந்து, அருகில் இருந்த வீட்டின் மீது விழுந்தது.

இந்த விபத்தில் குறித்த வீட்டில் இருந்த தாய், தந்தை மற்றும் கைக்குழந்தையும் உயிரிழந்தனர். மேலும் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாகத் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்று பரவலைத் தடுக்க மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும்

## வைத்தியர் யமுனானந்தா வேண்டுகோள்



சமூகத்தில் கொரோனா தொற்று பரவுவதை தடுப்பதற்கு பொதுமக்கள் விழிப்பாக செயற்பட வேண்டியது அவசியம் என யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோணா தொற்று நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

இலங்கையில் கொரோனா தொற்று மீண்டும் சமுகமட்டத்தில் பரவும் ஏதுநிலை உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது பொது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய காலத்தை எடுத்துக்காட்டுகின்றது

அதாவது யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை சமூகத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் முகக் கவசங்கள் அணிவது அவசியம் அடுத்ததாக சமூக இடைவெளி மிகவும் அவசியமாகும். இவை இரண்டையும் தவிர்த்து கட்டாயமாக கைகளை கழுவுதல் வேண்டும். கண்ட இடங்களில் கை தொடுதல் கூடாது. பயணங்கள் செய்துவிட்டு வீடுகளுக்கு வரும் போது தமது கைகளை சுத்தமாகக் கழுவிய பின்னரே வீட்டுக்குள் செல்ல வேண்டும்.

இத்தகைய காப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் யாழ். மாவட்டத்தில் சமூகத் தொற்று ஏற்படுவதைக் கட்டுப்படுத்த முடியும். அடுத்ததாக அநாவசியமாக வீதிகளில் பயணிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

மேலும் மக்கள் ஒன்று கூடும் நிகழ்வுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டும். கொரோணா தொற்று மீண்டும் ஏற்படுகின்றது என்ற அச்சத்தால் மக்கள் எல்லோரும் பொது இடங்களில் ஒன்று கூடுகிறார்கள். அதாவது வியாபார நிலையங்களில் பொருள்களை வாங்குவதற்காக முண்டியடிக்கிறார்கள். இது மிகவும் தவறான விடயமாகும்.

அடுத்ததாக இன்று ஏற்பட்டுள்ள கொரோணா சமூகத்தொற்று பலருக்கு பரவக் கூடாது. பரவுவதைத் தடுப்பதற்கு நாம் தேவையற்ற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும் பொது இடங்களுக்கு செல்லும் போது முகக்கவசம் அணிந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுதல் அவசியமாகும்.

இது தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்துவதன் மூலமே யாழ்ப்பாணத்தில் கொரோணா சமூகத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும். – எனவும் தெரிவித்தார்.

# வவுனியா சுற்றுலா மையத்துக்கு எதிராக நகரில் சுவரொட்டிகள்!

வவுனியா குளத்துப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா மையத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பல்வேறு இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியா குளத்திற்கான மக்கள் செயலணி என்று உரிமைக்கோரப்பட்டு ஒட்டப்பட்டுள்ள அந்த சுவரொட்டியில் வவுனியா நகரசபையே வவுனியாக்குளத்தை கூறுபோட்டு விற்காதே, நீர்ப்பாசனத் திணைக்களமே குளத்தை காப்பாற்ற வேண்டியவர்களே ஆக்கிரமிப்பிற்கு துணைபோவதா, நிலத்தடி நீருக்கும் நெல் உற்பத்திக்கும் ஆப்புவைப்பதா அபிவிருத்தி போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகள் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நியூ டயமன் உரிமையாளரிடமிருந்து ரூ.44 கோடியே 20 லட்சம் கிடைத்தது!

## சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்

இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எம்.டி. நியூ டயமன்ட் கப்பல் உரிமையாளர்களிடமிருந்து தீயணைப்பு பணிக்கான 44 கோடியே 20 லட்சம் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் சமுத்திர சூழல் பாதிப்புக்கான பணம் அது வல்ல என சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரியான அரச சட்டவாதி நிஷாரா ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

எனவே, சமுத்திர சூழல் பாதிப்புக்கான இழப்பீட்டை, அந்த நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், இழப்பீடு மற்றும்செலவாக, இலங்கை அரசாங்கம் கோரிய, 44 கோடியே 20 லட்சம் ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளதாக, எம்.டி. நியூ டயமன்ட் கப்பலின்உரிமையாளர்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி நிப்புண விமலசேகர குறிப்பிட்டுள்ளார்.

# சிறையில் கைதிகளை பார்வையிடத் தடை!



நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சிறைசாலைகளுக்கு கைதிகளைப் பார்வையிடச் செல்வது மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உடன் அமுலக்கு வரும் வகையில் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நீர்கொழும்பு மற்றும் மஹர சிறைசாலைகளுக்கு கைதிகளை பார்வையிட செல்கின்றமை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திவுலபிட்டிய பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான நபருடன் தொடர்பில் இருந்த 69 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது

குறித்த 69 பேரும் கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணுடன் சேவையாற்றியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திவுலுபிட்டிய பகுதியை சேர்ந்த பெண் ஒருவர்மற்றும்அவருடையமகள்கொரோனா தொற்றுக்கு உள்ளானமையை அடுத்து திவுலுபிட்டிய, மினுவங்கொட மற்றும் வெயங்கொட பொலிஸ் பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்ட பொலிஸ் ஊரடங்கு சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

இதேவேளை கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணின் தொழிற்சாலை ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்றும் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெண்ணின் தொழிற்சாலை ஊழியர்கள் 400 இற்கும் அதிகமானவர்கள் வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# ‘ரவி ஆட்ஸ்’ பேசுகின்றார்

(நேர்கண்டவர்:- ந.லோகதயாளன்)

இலங்கையில் 10 ஆண்டு காலத்திற்கு முன்னர் வரையில் மிகவும் வேண்டப்பட்ட ஒரு தொழிலாகவும் புகைப்படக் கருவிகள் வருவதற்கு முன்பு ஆவணப் படுத்தும் ஒரே மார்க்கமாகவும் காணப்பட்ட சித்திரக் கலை (ஆட்டிஸ்) இன்று பதிப்புத் துறையின் வளர்ச்சி காரணமாக முற்றாக அழிவடைந்து செல்கின்றது.



இவ்வாறு அழிவடையும் ஒரு கலையைத் தனது வாழ்வாககொண்டு இயங்கிய பல கலைஞர்கள் இக் கலைக்காக அன்று தமது வாழ்வையே துறந்து கலைத் தொழிலை ஆற்றியவர்கள். இன்று தமது வாழ்வாதாரத்திற்காக கிடைக்கும் எத்தொழிலையேனும் செய்யும் அவலத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடந்த காலத்தில் ஒரு பிரபலமான ‘ரவி ஆட்ஸ்’ என அழைக்கப்பட்ட கோண்டாவிலைச் சேர்ந்த கந்தையா – நந்தகுமாருடன் ‘காலைக்கதிர்’ செய்தியாளர் நேர்காணலில் ஈடுபட்டார்.

**கேள்வி:-** உங்களுக்குத் தற்போது எத்தனை வயது? எத்தனை வயதில் படம் வரைய ஆரம்பித்தீர்கள்?

**பதில்:-** எனக்கு தற்போது 57 வயது. சிறு வயதில் இருந்தே படம் வரைவதில் ஆர்வம் இருந்தாலும் 1982ஆம் ஆண்டு 15 வயதில் இருந்து இதைத் தொழிலாக மேற்கொண்டு வந்தேன். இருப்பினும் இதனைச் சுயமாகவே பழகினேன். எங்கேயும் பழகி வரவில்லை.

**கேள்வி:-** உங்களது இந்தக் கலைத் தொழில் காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு எங்கே பணியாற்றியுள்ளீர்கள்?

**பதில்:-** பல தனிப்பட்ட வரைதல்கள், காலத்துக்குக் காலம் தேவையான படங்கள் என்பவற்றுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள ராஜா, மனோகரா, செல்வா போன்ற திரையரங்குகளில் படம் வரைந்தேன். முதலில் கூட்டாகவும் 2000ஆம் ஆண்டு முதல் 2012 வரை தனித்தும் வரைந்தேன்.

**கேள்வி:-** இவ்வாறு சிறந்து விளங்கிய உங்கள் ஆக்கங்களை ஆவணப்படுத்த அல்லது அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் செல்ல என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளீர்கள்?

**பதில்:-** இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் வரைந்து அனுப்பியுள்ளேன். அதேபோன்று 1997ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை வீரகேசரி பத்திரிகைக்குப் படம் வரைந்தேன். அவற்றில் பல அப்போது வெளிவந்தும் உள்ளன.

**கேள்வி:-** கலை வாழ்க்கை அனுபவத்தோடு மண வாழ்க்கையின் அனுபவம். இவற்றில் எதில் அதிக காலத்தைச் செலவு செய்தீர்கள்?

**பதில்:-** எனது இளமைக் காலம் முழுவதையும் இந்தத் துறையிலேயே அர்ப்பணித்தேன். அதற்கும் அப்பால் எனக்கு உள்ள கலை அனுபவத்தின்பால் 30 வயது வரையான ஓர் ஆள் 50 வயதைத் தாண்டி எவ்வாறு வருவார் என்பதையும் கணித்து வரைவேன். அவ்வாறு இரு தடவைகள் திருமண பேச்சு எழுந்த போதும் அதனையும் கலைரசணையில் நோக்கியதனால் நான் திருமணம் செய்யவில்லை.

**கேள்வி:-** சாதாரணமாக எந்த அளவான படங்களை உச்சமாக வரைந்துள்ளீர்கள்?

**பதில்:-** எனது கை வண்ணத்தில் போக்கிரி பட விளம்பரத்துக்காக 40 அடி உயரத்தில் விஜய் படம் வரைந்தேன். இதேபோல் பெரும்பாலான போராட்ட அமைப்புக்களின் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நடிகர்கள் என அனைவரினது படமும் வரையும் சந்தர்ப்பம் கிட்டியது.

**கேள்வி:-** போராட்ட அமைப்புக்களின் தலைவர்களது படம் வரையும் சந்தர்ப்பம் கிட்டியதாகக் கூறியுள்ளீர்கள். முதலில் எந்தச் சந்தர்ப்பம் கிட்டியது?

**பதில்:-** 1985ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவால் கோப்பாய் பகுதியில் உள்ள முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே தலைவர் பிரபாகரன் முன்பாக இருத்தப்பட்டேன். அப்போது திடீரென தலைவரின் படத்தை வரையுமாறு கூறப்பட்டது. அப்போது ஒருவித பதற்றம் இருந்தது. அதாவது ஏதும் பிழை வந்துவிடுமோ என்ற ஏக்கம் நிலவியது. அன்று பிரபாகரனின் படம் வரைந்தமையால் பின்னர் இந்திய இராணுவத்தால் தேடப்பட்டேன். அதற்காக தலைமறைவு வாழ்வும் வாழவேண்டி ஏற்பட்டது.

**கேள்வி:-** இவ்வாறு தலைவர் பிரபாகரனின் படம் மட்டும்தான் வரையும் சந்தர்ப்பம் கிட்டியதா அல்லது ஏனையவர்களின் படமும் வரையப்பட்டதா? இதன்போது ஏற்பட்ட வித்தியாசமான அனுபவம் ஏதும் உண்டா?

**பதில்:-** தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மட்டுமன்றி ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். எனப் பெரும்பாலான தலைவர்களின் படம் கீறிய அனுபவம் உண்டு. இதில் இரண்டு வித்தியாசமான அனுபவம் உண்டு. அதாவது நான் படம் வழங்கி விட்டுச் சென்ற பின்பு அப்படத்துக்காக வேறு ஒருவர் அடி வாங்கியது தற்போதும் நினைவு உண்டு. இரண்டாவது வித்தியாசமான அனுபவம் தற்போதைய ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பில் ஏற்பட்டது. அதாவது நான் வரைத்த படத்துக்குப் போட்டியாக அவர் வரைந்து காண்பித்தமை. அப்போதுதான் அவரும் ஓர் ஆட்டிஸ் என்பதை அறிந்தேன்.

கேள்வி. தற்போதும் உங்கள் வாழ்வாதாரத்திற்காக இதே கலைத் தொழிலைத் தான் மேற்கொள்கின்றீர்களா?

பதில். இதனை என்னால் மேற்கொள்ள முடியும். ஆனால் தற்போது எவருமே நாடுவது கிடையாது . ஏனென்னில் கணணியுகத்தின் ஊடாக ஸ்கிறீண் பிறிண்ட் எமது தேவையை குறைத்துவிட்டது. இதனால் தற்போது உணவிற்காக ஓர் தொழிலை தேட வேண்டிய்நிலமை உள்ளதனால்

தற்போது டிஸ் அன்ரனா பொருத்தும் பணியில் ஈடுபடும் நிலமைக்கு தள்ளப்பட்டுள்ளேன்.

**கேள்வி:-** தற்போது கணினி யுகம் என்றீர்கள். நீங்கள் கணினி மூலம் வரையும் முயற்சியில் ஈடுபடவில்லையா?

**பதில்:-** இல்லை. ஏனெனில் என்னிடம் கணினி வசதி கிடையாது. இதனைப் பலரும் கூறியுள்ளனர். அதனால் கணினியிலும் வரைய வேண்டும் என்ற ஆசை தற்போது ஏற்பட்டுள்ளது. இருப்பினும் நிதி நிலமைகள் அதற்கு ஈடுகொடுக்கவில்லை.

**கேள்வி:-** நீங்கள் ஆட்டிஸ்ஸாக இருந்த காலத்தில் உங்களுக்குப் பிடித்த வேறு இதே கலைஞரில் யாரைப் பிடித்தது? இதே கலைஞர்களை எமது பகுதியில் எவ்வாறு நோக்குகின்றனர்?

**பதில்:-** எனது காலத்தில் ஆட்ஸ் மணியம், பெனடிக் மாஸ்ரர், கிருபா போன்ற கலைஞர்கள் பலர் இருந்தனர். இதில் எனக்கு மிகவும் பிடித்தவர் குருநகரைச் சேர்ந்த பெனடிக் மாஸ்ரர். இவர்களை இங்குள்ளவர்கள்கூட மறக்கும் நிலையில் பெனடிக் மாஸ்ரருக்கு இந்தியாவில் தாம்பரத்தில் சிலை வைக்கப்பட்டுள்ளது.

## திவுலப்பிட்டிய பிரதேசத்தில் 2,000 பேருக்குச் சோதனை

திவுலப்பிட்டிய பகுதியில் 2 ஆயிரம் பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பை பேணியவர்களுக்கே இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

இதில், நேற்றைய தினம் கொரோனா தொற்று உறுதியானவர்கள் பணிபுரிந்த ஆடைத் தொழிற்சாலையின் ஏனைய ஊழியர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களும் உள் ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ரியூஷன்களுக்கும் தடை!

கொழும்பு மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களையும் மூடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. கம்பஹா மாவட்டத்தில் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதை அடுத்து,மேல் மாகாணத்தில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் அவசரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களை மூடுமாறு நேற்று முன்தினம் பிற்பகல், அறிவித்திருந்த அரசாங்கம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும், மறு அறிவித்தல் வரை மூடுமாறு அன்றிரவு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, அனைத்து தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளும் திங்கள் தொடக்கம் மறு அறிவித்தல் வரை மூடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் அத்தியாவசிய பொருள் விநியோகிக்க நடவடிக்கை

கம்பஹா – வெயாங்கொட, திவுலப்பிட்டிய, மினுவாங்கொட ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இந்நிலையில் அப்பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு, பிரதேச செயலாளர் அறிவுறுத்தியுள்ளாரென கம்பஹா மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தப் பகுதியில் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப்பொருள்களை, விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், உலர் உணவுப்பொருள்களை வழங்க வேண்டிய தேவையேற்படின் கடந்த காலங்களைப் போல, கிராம மட்டங்களுக்கச் சென்று, விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவும் தயார் நிலையிலேயே இருக்கின்றோம் என சுனில் ஜயலத் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா– திவுலப்பிடிய பகுதியில் பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தப் பெண்ணுடன் தொடர்புகளைப் பேணிய பெரும்பாலானோர் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே கம்பஹா –வெயாங்கொட, திவுலப்பிட்டிய, மினுவாங்கொட பகுதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கலாதீபம் சஞ்சிகை வெளியீடு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ‘கலாதீபம்’ மின் சஞ்சிகை (e Magazine) யின் முதலாவது இதழ் கலாசாலையில் நேற்று இடம்பெற்ற ஆசிரியர் தின விழாவின் பொழுது வெளியிட்டு வைக்கப்பட்டது

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டகலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் வி.எஸ். குணசீலன் மின் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

# 20ஆவது புதிய அரசமைப்புத் திருத்தம் ஒட்டுமொத்த மக்களையும் அடிமைப்படுத்தும்!

## எச்சரிக்கிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



கொழும்பு, ஒக்.06

இருபதாவது திருத்தம் சிறுபான்மை தேசிய இனங்கள் உட்பட ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் அடிமைப்படுத்தும் செயல். இதனை நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் ஒருமித்த குரலில் எதிர்க்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இப்பொழுது ஆட்சியில் இருக்கின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் தாங்கள் முழுக்க முழுக்க சிங்கள மக்களின் வாக்குகளினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர் என மீண்டும் மீண்டும் கூறி வருகின்றார்கள்.

ஜனாதிபதி தேர்தலிலும் சரி, நாடாளுமன்றத் தேர்தலிலும் சரி வடக்குக் - கிழக்கு தமிழ் மக்கள், மலையகத் தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் அனைவருமே கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த தரப்பினருக்கு எதிராகவே வாக்களித்திருந்தனர் என்பதும் தேர்தல் முடிவுகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதாகவும் அரசியல் சாசனத்துக்கான இருபதாவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கும் புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்குவதற்கும் சிங்கள மக்கள் தங்களுக்கு ஆணை வழங்கியிருப்பதாக கூறி வருகின்றனர்.

1972 ஆம் ஆண்டு சிறீமா பண்டாரநாயக்க அரசால் கொண்டுவரப்பட்ட குடியரசு அரசியல் யாப்பும், 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் யாப்பும் தமிழ் மக்களின் ஒப்புதல் இல்லாமலேயே கொண்டுவரப்பட்டது.

இந்த யாப்புகள் தயாரிக்கப்பட்ட பொழுது தமிழ் மக்கள் கொடுத்த குறைந்தபட்ச கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டமையால் அந்த அரசியல் யாப்பு தயாரிப்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குதாரர்களாக இருக்கவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இப்பொழுது பேசப்படுகின்ற அரசியல் யாப்புக்கான 20 ஆவது திருத்தம் என்பது தமிழ் தேசிய இனமோ அல்லது தேசிய சிறுபான்மை இனங்களோ ஏற்றுக் கொண்ட ஒரு திருத்தமல்ல. வடக்கு கிழக்கு தமிழ் மக்களோ மலையகத் தமிழ் மக்களோ, முஸ்லிம் மக்களோ 20 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை தமது வாக்களிப்பினூடாக உறுதி செய்திருந்தார்கள்.

அதுமாத்திரமல்லாமல் சிங்கள மக்களின் பெரும்பான்மையை மாத்திரம் வைத்துக் கொண்டு ஏனைய தேசிய இனங்கள் சிறுபான்மை இனங்களின் ஆதரவு இல்லாமல் கொண்டுவரக்கூடிய இந்த 20 ஆவது திருத்தம் என்பதும் ஜனநாயக விரோதமானதும் ஒருதலைப்பட்சமானதும் ஆகும்.

இலங்கை பல இனங்கள், பலமதங்கள், பலமொழிகளை உள்ளடக்கிய ஒருபன்மைத்துவ சமூகம் கொண்ட நாடாகும். அவ்வாறானதொரு சூழ்நிலையில் பெரும்பான்மை இனமொன்றின் பெரும்பான்மை இருக்கின்றது என்ற காரணத்தால் ஏனைய இனங்களின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளாமல் ஒரு சர்வாதிகாரத்தை உருவாக்கக் கூடியவகையிலும் தனிமனிதனை வலுப்படுத்தும் வகையிலும் அரசியல் சாசனத்தில் திருத்தத்தைக் கொண்டுவருவது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு விடயமல்ல. வெறும் எண்ணிக்கைப் பெரும்பான்மை மட்டுமே ஒரு முழுமையான ஜனநாயகம் ஆகிவிடாது.

சிறுபான்மையினரின் நலன்களையும் உள்ளடக்கி அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் பெரும்பான்மை முடிவைப் பிரதிபலிப்பதே உண்மையான ஜனநாயகமாகும். மேலும் பெரும்பான்மை இன மக்களின் உண்மையான மனநிலைக்கு மாறாக, அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறி, அவர்கள் அளித்த ஆணையை மீறி ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் ஒரு தனிநபரின் அதிகார வரம்பெல்லைக்குள் அடிமைப்படுத்துவதும் ஜனநாயகமாகாது.

இந்த 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக ஆளும் தரப்பானது எதிர்தரப்பினருடன் பல்வேறு விதமான பேரபேச்சுக்களை நடாத்தி வருகின்றனர் என்பதும் ஊடக வாயிலாகக் கிடைக்கும் செய்திகளாகும்.

எதிர்த்தரப்பில் இருக்கக் கூடிய தமிழ் முஸ்லிம் இனங்களை சார்ந்த யாராவது இந்த 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக செயற்படுவார்களாக இருந்தால் மக்களுக்கு இவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு எதிராக தங்களது சொந்த நலன், கட்சி நலன் சார்ந்த முடிவாக இருக்குமே தவிர தமது மக்களுடைய நலன் சார்ந்த முடிவாக அமையாது.

இந்த அடிப்படையில் 20 ஆவது திருத்தம் என்பது வடக்கு கிழக்கு தமிழ் மக்களோ மலையக தமிழ் மக்களோ, முஸ்லிம் மக்களோ ஏற்றுக் கொண்ட ஒரு திருத்தமல்ல என்பதை நாடாளுமன்றத்தில் இவர்கள் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். - என்று அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாவசிய பயணங்கள் ஒன்றுகூடல்களை நிறுத்துக!

### இராணுவத் தளபதி உத்தரவு



*கொழும்பு, ஒக்.06*

*அத்தியாவசியமற்ற அனைத்து பயணங்கள் மற்றும் ஒன்று கூடல்களை நிறுத்துமாறு சுகாதார அதிகாரிகள் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.*

*மினுவாங்கொட பகுதியில் தனியார் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 150 தொழிலார்களின் பி.சி.ஆர். முடிவுகளின் அடிப்படையில் 69 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.*

*இதனைத் தொடர்ந்து, அத்தியாவசிய பயணங்களைத் தவிர்க்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.*

*இருப்பினும் வெளியில் செல்பவர்கள் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும் என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.*

## தீப்பெட்டிக்குள் ஹெரோயின்! கல்முனை இளைஞர் கைது!!

### மாவா தூளும் சிக்கியது



ஹெரோயின் போதைப்பொருளைச் சூட்சுமமாகக் கடத்திய இளைஞரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரைபள்ளி வீதியில் சந்தேகத்துக்கிடமாக மோட்டார் சைக்கிளில் நடமாடிய 29 வயதுடைய இளைஞரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் சோதனை செய்தனர்.

இதன்போது, குறித்த இளைஞர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளின் ஆசனத்தின் கீழ் தீப்பெட்டியொன்றில் மறைத்து சிறு பொதி செய்யப்பட்ட ஹெரோயின் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டன. விசாரணையை முன்னெடுத்த பின்னர் குறித்த இளைஞரின் வீட்டிலிருந்து தடைசெய்யப்பட்ட மாவா போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

கல்முனை - 2, கடற்கரைப்பள்ளி வீதியைச் சேரந்த 29 வயதுடைய குறித்த இளைஞரிடமிருந்து ஹெரோயின் மற்றும் மாவா தூள் என்பன கைப்பற்றப்பட்டு கல்முனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## மினுவாங்கொடையில் அவசர நிலை அமுல்!

கொழும்பு, ஒக்.06

மினுவாங்கொடைப் பிரதேசத்தில் அவசர நிலை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொடை, வெயாங்கொடை மற்றும் திவுலப் பிட்டிய ஆகிய பகுதிகளில் மறு அறிவிப்பு வரை தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் மினுவாங்கொடை மற்றும் திவுலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 70 பேரும், 16 வயது மாணவியும் கொரோனாத் தொற்றுடன் கண்டறியப்பட்ட நிலையில் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களைக் கண்டறிந்து தொற்றுப் பரவலைத் தடுக்க இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்று வந்த மட்டு. மாணவன் திடீரென உயிரிழப்பு

### இரத்த மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு

காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற்று வந்த பாடசாலை மாணவன் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனையில் உள்ள பாடசாலையில் தரம் 8 இல் கல்வி கற்று வரும் பதுரியா குறுக்கு வீதி, பிறைந்துறைச் சேனையைச் சேர்ந்த சமீம் முகம்மட் சஜாத் (வயது 13) எனும் மாணவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் சிலநாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். அவர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று திடீரென உயிரிழந்துள்ளார்.

இந்தநிலையில், குறித்த மாணவனின் உடலிருந்து பெறப்பட்ட இரத்த மாதிரிகொரோனாத்தொற்றுப்(பி.சி.ஆர்.) பரிசோதனைக்குஉட்படுத்தப்பட்டுள்ளது.



இன்று உலக ஆசிரியர் தினம். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகியுள்ளது.

- செல்வி விநாயகமூர்த்தி -

# தம் வாழ்வையே அர்ப்பணிக்கும் ஆசிரியர்கள்!

உலகம் முழுதும் ஒக்டோபர் 06ஆம் திகதி உலக ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்படுகின்றது. எங்கே நடப்படுகின்றாயோ அங்கயே விதையாகு என்பது பொன்மொழியாகும். ஒரு நாட்டின் சிறந்த கல்வியாளரைக் கௌரவிக்க அல்லது அந்த நாட்டில் கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கொண்டாட அந்தந்த நாடுகளில் ஆசிரியர் நாள் வெவ்வேறு திகதிகளில் கொண்டாடப்பட்டாலும் 1994ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஒக்ரோபர் 06இல் எமக்கு மகத்தான வாழ்வை வாழ வழியமைத்துக்கொடுத்த ஆசிரியர்களைப் பாராட்டி கௌரவிப்பதற்காக ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆசிரியரைப் பாராட்டும் நாளான இன்று கடந்த ஆண்டைப்போல் சிறப்புறக் கொண்டா முடியாத சூழ் நிலைக்குள் தள்ளப்பட்டாலும் வழிகாட்டியாக நின்றவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மனித வரலாற்றில் பிரிக்க முடியாத மனித சமுதாயத்தின் அச்சாணியாக விளங்குவதுடன் வாழ்க்கை என்ற பாடத்தைக் கற்பித்து மாணவர்களுக்கு ஒரு உண்மையான வழிகாட்டியாக விளங்குபவர்கள் ஆசிரியர்களாவர். ஒரு மனிதன் வாழும் காலம் முதல் அவன் மரணித்த பின்பும் பிறமனிதர்களால் போற்றப்படும் மனங்களில் ஒரு சிலர்தான் வாழவும் முடியும்; ஆளவும் முடியும். அதில் ஆசிரியர் தொழிலில் இருப்பவர்கள் முதன்மை வகிக்கின்றனர். இவ்வுலகில் எத்தனையோ தொழில்கள் இருந்தாலும் போற்றுதலுக்கும் மதித்ததலுக்கும் உரியதுமான தொழில் ஆசிரியர் தொழிலாகும்.

மற்றப் பணிகளைப்போல் ஆசிரியர் பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரத்துக்கான பணியல்ல. தனது வாழ்வையே ஆதாரமாக்கும் பணி. அந்தப் பணியில் வேண்டுமானால் வாழ்வை நகர்த்துவதற்கான ஊதியம் கிடைக்கலாம். ஆனால், அந்த ஊதியத்துக்கான பணியல்ல என்பதுதான் ஓர் ஆசிரியரின் சிறந்த தத்துவமாகும். ஆசிரியர் பணி ஓர் உயிரோட்டமான பணி என்பதுடன் ஆய்வு ரீதியான – உளவியல் ரீதியான – சேவை ரீதியான கால நேரமற்ற அர்ப்பணிப்புள்ள பணியாகவே கொள்ள முடியும்.

ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டுமே ஆசிரியர்களாக இருப்பதில்லை. அப்படி இருக்கவும் முடியாது. அவர்தம் வாழ்வில் பெரும் பகுதி நேரங்களை ஆசிரியர்களாகவே கடத்துகின்றனர். அவர்களின் சேவைக்கு எல்லை கிடையாது. மனித வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தி அதற்கு அர்த்தத்தைக் கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கு உள்ளது.

உலகிலுள்ள பணிகளிலே சிறந்த பணி ஆசிரியர் பணி என்று சொல்லுமளவுக்குப் பாரிய பொறுப்புக்கள் கொண்டதாகும். இந்தப் பணிக்குச் சிறந்த ஆளுமைமிக்க, ஒழுக்கமிக்க தகுதியான நபர்களைத்



தெரிவு செய்வது ஓர் அரசின் பொறுப்புமிக்க கடமையாகும்.

சமூகத்தின் ஏணிகளாகவும் தோணிகளாகவும் இருந்து மனித வாழ்வில் வழியேற்பட பாலங்களை அமைத்துள்ள ஆசிரியர்களது பிரச்சினைகளும் ஆராயப்பட வேண்டிய நாளும் இன்றாகும். ஆசிரியர் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பது இல்லை. ஒழுக்கம், பண்பு, ஆன்மீகம், பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை நல்வழிப்படுத்தும் நல்வழிகாட்டியாக, தன்னலமற்ற தியாக மனப்பான்மை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் இந்தப் பணியை மிகவும் தியாக உணர்வுடனும், பொறுப்புணர்வுடனும், கடமையுணர்வுடனும் பணியாற்ற வேண்டும். ஏனெனில், பொதுவாக இன்றைய ஆசிரியர்கள் சம்பளத்துக்கு வேலைபார்க்கும் ஆசிரியர்களாகவே தன் தொழிலைப் பார்க்கின்றனர். பொதுவாக பாடசாலையில் கற்பிப்பதை விட தனியார் கல்வி நிலையங்களில் ஆர்வம் காட்டுவதிலும், அதில் இலாபம் மீட்டுவதையுமே இன்றைய காலத்தில் முனைப்பாகக் கொண்டுள்ளனர்.

பொதுவாக தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்தல் முறைகளில் காட்டும் முனைப்பு பாடசாலைகளிலுள்ள வகுப்பறைக் கல்விகளில் இல்லை. இது இன்று ஒரு புறம் பெரும் குறைபாடுகளாகக் காணப்பட மறுபுறத்தே பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தாம் கற்பிக்கும் பாடத்திட்டங்களில் தெளிவின்மை, கற்பித்தல் முறையில் தெளிவின்மை, ஆளுமையற்ற சூழல், தனக்குப் பிடித்த மாணவர்களை மட்டும் பாராட்டுதல், ஊக்குவித்தல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்றவற்றோடு மந்தமான மாணவர்களை மட்டம் தட்டுதல் எனப் பல்வேறுபட்ட குறைபாடுளை இன்றைய மாணவர்கள் எதிர்நோக்குகின்றனர்.


இது தொடர்பில் பல்வேறுபட்ட வாதப்பிரதிவாதங்களை முன்வைத்தாலும் இவற்றுக்கு எதிர்மறையான கண்ணியமிக்க தன் கடமையை செவ்வனே செய்கின்ற ஆசிரியர்களும் எம் சமூகத்தில் இல்லாமல் இல்லை. அதேவேளை, சமீபத்திய காலங்களாக மாணவர்கள் மீது பாலுணர்வைத் தூண்டும் அல்லது பாலியல் ரீதியான சேஷ்டைகள் செய்யும் ஆசிரியர்களின் நடவடிக்கைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதுடன் பெற்றோர் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் இவர்கள் தொடர்பில் அச்சத்துடன் நோக்கும் சம்பவங்களும் அதிகரித்தும் வருகின்றன.

மாதா, பிதா, குரு என்னும் மூன்றாவது படிமுறையில் பெற்றோருக்கு அடுத்த இடத்தில் வைத்து நோக்கப்படுகின்ற ஆசிரியர்கள் அம்மாணவர்களின் வாழ்வின் ஏணியாக இருக்க வேண்டுமே தவிர வீழ்ச்சியின் திறவுகோலாக என்றுமே மாறிவிடக்கூடாது.

அதேவேளை, வகுப்பறைகள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நல்லுறவைக் கட்டியெழுப்பும் இடமாக அமைய வேண்டுமே தவிர மாறாக குரோதம், வன்மம், போட்டி, பொறாமை என்பவற்றை வளர்க்கும் இடங்களாக இருத்தல் கூடாது. ஆனால், இன்றைய மாணவர்கள் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் காயப்படும் இடங்களாக வகுப்பறைகள் மாறிப்போயிருப்பது வேதனையளிக்கும் ஒரு விடயமாகும்.

உண்மையான ஆசிரியருக்கு மாணவர்களின் நலமே பெரும் பரிசு. எனவே, எதிர்கால சமூகத்தை வடிவமைக்கும் பாரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஆசிரியர் சமூகம் தங்கள் பணியைத் திறம்படச் செய்து மாணவர் உலகில் மாற்றத்தைக் கொண்டு வருவது மட்டுமன்றி நல்ல சந்ததியினரை உருவாக்கிட முன்வர வேண்டும்.

**“சமூகத்தின் ஏணிகளாகவும் தோணிகளாகவும் இருந்து மனித வாழ்வில் வழியேற்பட பாலங்களை அமைத்துள்ள ஆசிரியர்களது பிரச்சினைகளும் ஆராயப்பட வேண்டிய நாளும் இன்றாகும்.”**



# 20ஆம் திருத்தத்தால் ஆபத்து ஐ.நா. சபையில் எடுத்துரைப்பு!

## அருட்தந்தை ஆ.குழந்தைசாமி விளக்கம்



கொழும்பு, ஒக்.06

இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டமூலம் ஜனநாயகத்துக்கு ஆபத்தாக அமையுமென அருட்தந்தை ஆ.குழந்தைசாமி, ஐ.நா.வில் எடுத்துரைத்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 45 ஆவது கூட்டத்தொடர் கடந்த செப்ரெம்பர் 14ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்தக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 7 ஆம் திகதி வரை நடைபெற இருக்கின்றது.

அந்தவகையில் மூன்றாவது வாரத்தில் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் பிரதான அவையில் இடம்பெற்ற பிரிவு 6 தொடர்பான பொது விவாதத்தில் தமிழ் உலகம் என்ற அமைப்பு சார்பாக உரையாற்றிய அருட்தந்தை ஆ.குழந்தைசாமி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

புதிய அரசமைப்பு அதிகார பகிர்வின் அடிப்படைக் கொள்கைகளைத் தெளிவாக, வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மேலும், புதிய அரசமைப்பை உருவாக்கும்போது உருவாக்க உரிமையுள்ளவர்களுக்கு உரிய இடத்தை வழங்கவேண்டும்.

20 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம், ஜனாதிபதிக்கு தனது ஆட்சிகாலத்தில் சட்டரீதியான நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்கிறது. ஜனாதிபதி தனக்கு எத்தனை அமைச்சுகளையும் வைத்துகொள்ளலாம். நாடாளுமன்றபேரவை நாடாளுமன்ற உறுப்பினர்களால் மட்டும் உருவாக்கப்படுகிறது.

இதனால் பிற நாடாளுமன்ற கட்சிகளிருந்து உறுப்பினர்களையும் திறமைவாய்ந்த, ஒழுக்கமுள்ள நபர்களையும் சேர்க்காமல், இலங்கையின் பன்மைத்தன்மையை அழிக்கிறது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஓராண்டுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் பிரதமரைக் கலந்து ஆலோசிக்காமல் கலைக்க அதிகாரம் உண்டு.

அதேபோன்று தலைமை அமைச்சர், அவரால் பரிந்துரைசெய்யப்பட்ட இருவர், எதிர்கட்சி தலைவர், அமைச்சர், இரஜாங்க அமைச்சர், இணை அமைச்சர் ஆகியோரை எப்பொழுது வேண்டுமானாலும் ஜனாதிபதி நீக்கலாம், எவரை வேண்டுமானாலும் நியமிக்கலாம்.

இதனால் நடாளுமன்ற பேரவை அரசமைப்பு பேரவையைவிட பலவீனமாகக்கப்பட்டுள்ளது. தேசிய உருவாக்க அமைப்பையும் சேவையை தணிக்கை செய்யும் அமைப்பையும் கலைத்துவிட்டார். எத்தனை அமைச்சர்கள், இணை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் வேண்டுமானாலும் நியமிக்கலாம்.

ஜனாதிபதியின் சர்வாதிகாரம் இலங்கையில் மக்களாட்சியை அகற்றும். மக்களாட்சி அழிப்பு சர்வாதிகாரத்தை பெற்றெடுக்கும். அது தமிழ் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே இந்த பேரவை, தமிழ் மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மன்னார் இந்துசமய கலாசாரத் திணைக்கள ஏற்பாட்டில் 'தெய்வீகக் கிராமம்' நிகழ்வுகள்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாந்தை மேற்கு பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடுசெய்த 'தெய்வீக கிராமம்' நிகழ்வு நடைபெற்றது.

இந்தநிகழ்வு, மன்னார், ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ். கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவசிறி இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா கலந்து கொண்டார்.

இதன்போது, ஆண்டாங்குளம் சிறி நாகபூசனி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து, ஆலயத்தில் இருந்து மண்டபம் வரை இந்து எழுச்சி ஊர்வலம் இடம்பெற்றதுடன் கலை நிகழ்வுகள், சிறப்பு உரைகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கிராம மக்கள், பிரதேச செயலக அதிகாரிகள், அறநெறி பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## 20 இற்கு எதிரான ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஒக்.06

20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நேற்று (திங்கட்கிழமை) முதல் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கின்றது.

இந்த நடவடிக்கையின் முதல் கட்டமாக இன்றைய தினம் நாடு முழுவதும் கையேடுகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அதன் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப்போராட்டத்துக்கு எதிர்க்கட்சிகளில் பெரும்பாலானவை ஆதரவு வெளியிட்டுள்ளன.

பொதுமக்களும் கறுப்புக்கொடிகளை கட்டி 20 ஆவது திருத்திற்கான எதிர்ப்புக்களை வெளிப்படுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்ப்பில் ஈடுபட்ட ஏனைய அரசியல் கட்சிகளும் முன்னெடுக்கவுள்ளன.

## பஸ் பயணத்திலும் கட்டுப்பாடு அதிகரிப்பு

பஸ்களில் ஆசனாங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவிப்பை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டார்.

ஏற்கனவே இந்த திட்டம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்று அச்சம் குறைவடைந்ததமையைத் தொடர்ந்து, அதனை பெரிதளவில் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த நிலையில், உடன் அமுலுக்கு வரும் வரையில் இந்த திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக திலும் அமுனுகம தெரிவித்தார்.

கம்பஹா - திவுலபிடிய பகுதியில் வசித்து வரும் 39 வயதுடைய பெண்ணொருவருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து மினுவாங்கொட மற்றும் திவுலபிடிய பகுதியில் உள்ள 07 கிராம சேவகர் பிரிவுகளுக்கு மறு அறிவித்தல் வரும் வரை பொலிஸ் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

அந்தப் பகுதிகளுக்கு நுழைவது மற்றும் வெளியேறுவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் அறிவித்தது. இந்த நிலையிலேயே பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என உடன் அமுலுக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. (மற்றொரு செய்தி 10ஆம் பக்கத்தில்)


## நால்வருக்கு குளவிக் கொட்டு

பதுளை, ஒக்.06

பதுளை, லுனுகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோலன்ஸ் தோட்டத்தில் நான்கு தொழிலாளர்கள் நேற்றுக் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

கொழுந்து கொய்துகொண்டிருக்கையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் லுனுகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இறைச்சிக்காக மாடுவெட்டத் தடைசட்டம் உடனடியாக அமுலுக்கு வருதல்வேண்டும்



ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.06

இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதற்கான தடை உடனடியாக அமுலுக்கு வரவேண்டும் என விலங்குகள் மற்றும் இயற்கைக்கான நீதி அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித்த தேரர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், நாட்டின் மீது அக்கறை கொண்ட தலைவர் செய்ய வேண்டியது அதிகாரங்கள் அனைத்தையும் தன் வசப்படுத்திக் கொள்வதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, நாரஹேன்பிட்டி ஸ்ரீ சங்கா விகாரை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

உயிரினங்களை வதைப்பதை அனைத்து சமயங்களும் பாவச் செயல் என்றே கூறுகின்றன. இந்நிலையில் இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதைத் தடைசெய்ய வேண்டும் என்பது தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வரும் விடயமாகும்.

இதற்கமைய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு மாடுகளை வெட்டுகின்றமையைத் தடைசெய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இதற்கு ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் இன, மத பேதமின்றி அதனை ஆதரித்திருந்தனர். ஆனால், இந்த தீர்மானமானது உடனே நிறைவேற்றப்படாமல் ஒரு மாதத்திற்கு பிற்போடப்பட்டது. இதற்கு பிரதான காரணம் இவ்வாறு இறைச்சிக்காக மாடுகளை வெட்டும் வர்த்தகர்களால் முன்னெடுக்கப்பட்ட அழுத்தமாகும்.

தற்போது இந்த தீர்மானம் தொடர்பாக அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனவே, இந்த தீர்மானத்தை நிறைவேற்ற மேலும் காலம் கடத்தாமல் அதனை உடனே அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

இந்நிலையில், சிலர் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது பாவச்செயல் என்றால், ஏனைய விலங்குகளை உணவுக்காக பயன்படுத்துவது பாவச்செயல் இல்லையா என கேள்வியெழுப்பி வருகின்றனர். அதுவும் பாவச் செயல்தான்.

ஆனால், முதலில் நாம் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுகின்றமையைத் தடுத்துவிட்டு, அதிலிருந்து ஏனைய விலங்குகளையும் இறைச்சிக்காக வெட்டுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். முதலில் இந்த தீர்மானமானம் ஓர் இனத்தையோ மதத்தையோ இலக்குவைத்து எடுக்கப்பட்டதல்ல என்பதை கவனத்திற் கொள்ளவேண்டும். - என்று குறிப்பிட்டுள்ளார்.

# கம்பஹாவில் சமூகத் தொற்று படுதீவிரம் மேலும் 69 பேர் கொரோனாவால் பாதிப்பு

## அதிர்ச்சியில் அரசு; உயர்மட்டத்தில் பேச்சு

கொழும்பு, ஒக்ரோபர்.05

கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானார் என்று நேற்று அடையாளம் காணப்பட்ட பெண்ணுடன் தொடர்புகளைப் பேணிய 69 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பெண் பணியாற்றும் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் உள்ளவர்களிடையே நடத்தப்பட்ட பரிசோதனையிலேயே அவர்களுக்கும் தொற்று இருக் கின்றமை உறுதியாகியுள்ளது.

இதன்படி பரிசோதனை நடத்தப்பட்ட 150 பேரில் 69 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு இன்று அறிவித்துள்ளது.

பெண்ணுக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து மினுவாங்கொட, திவுலப்பிட்டிய மற்றும் வெயாங்கொட ஆகிய பிரதேசங்களில் நேற்று முதல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நாடு பூராகவும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த பெண்ணுடன் தொடர்புகளைப் பேணிய 500 இற்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள் ளனர். அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் 150 பேரின் பரிசோதனை முடிவுகள் இன்று காலை வெளியானது டன் மற்றைய முடிவுகள் இன்று மாலை வெளியாகவுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் சமூகத் தொற்றாக மாறியமை அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அங்கு கொரோனா எவ்வாறு புகுந்தது? அதை உடனடியாக எவ்வாறு தடுப்பது? போன்ற கேள்விகளுக்கு விடைகளைக் காணும் உயர்மட்டப் பேச்சில் அரசு ஈடுபட்டு வருகின்றது.

## ஆனமடுவ இளைஞர் ஒருவருக்கு மூன்றாவது தடவை கொரோனா!

கொழும்பு, ஒக்.05

ஆனமடுவவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மூன்றாவது தடவையாகக் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனமடுவ, தேனன்குரிய பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரே மூன்றாவது தடவையாகக் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஒகஸ்ட் 18ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து (டுபாய்) வந்த குறித்த இளைஞர் வெலிகந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை முதலில் தெரிய வந்தது.

வெலிகந்தை வைத்தியசாலை யி லிருந்து வெளியேறிய இளைஞர் தன்னை வீட்டில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தினார்.

அதன்பின்னர் குறித்த இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பி.சி. ஆர். பரிசோதனையின் போது இரண்டாவது தடவை அவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

அதையடுத்து அந்த இளைஞர் இரணவில கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டார். இரண்டாவது தடவை அவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்னர் அவரது வீட்டைப் பாதுகாப்பாக மாற்றுவதற்கும், அவர் சுயதனிமைப்படுத்தலை மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கும் ஏதுவான சூழலைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் மேற்கொண்டனர்.

சுய தனிமைப்படுத்தலில் இருந்த வேளை காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட குறித்த இளைஞர் இம்மாதம் 2ஆம் திகதி சிலாபத்திலுள்ள கொரோனா பரிசோதனை நிலையத்தில் சேர்க்கப்பட்டார். இதன்போது அவருக்கு மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்புள்ளமை தெரியவந்துள்ளது - என்றார்.



கம்பஹா மாவட்டத்தில் ஊரடங்கு அமுலில் உள்ள பிரதேசத்தில் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

## தமிழக மீனவரின் சடலம் இந்தியாவுக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.05

அல்லைப்பிட்டியில் கரை ஒதுங்கிய இந்திய மீனவரின் சடலத்தைப் பொறுப்பேற்று இந்தியாவிற்கு அனுப்பி வைக்க யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவில் இருந்து கடற்றொழிலிற்காக கடந்த புதன்கிழமை புறப்பட்ட நிலையில் நடுக்கடலில் மாயமான மீனவர் எனக் கருதப்படுபவர் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி கடற்கரையில் நேற்று முன்தினம் ஒதுங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை காலை ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து தங்கச்சிமடத்தை சேர்ந்த தனிக்கிளாஸ் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது புதன்கிழமை இரவு கச்சத்தீவுக்கு அண்மையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது திடீரென கடலில் சீற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் படகிலிருந்து கார்சன் என்ற மீனவர் நிலை தடுமாறி நடுக்கடலில் விழுந்து மாயமானார்.

அல்லைப்பிட்டியில் கரை ஒதுங்கியது இவரது உடலாக இருக்கலாம் எனக் கருதப்பட்ட நிலையில் அந்தச் சடலத்தை அடையாளம் காட்டி நீதிமன்ற அனுமதியின் பெயரில் யாழில் உள்ள இந்தியத் தூதரகம் பொறுப்பேற்றுள்ளது. இந்தச் சடலம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## ஆசன எண்ணிக்கைக்கே அனுமதி; பஸ், ரயிலில் முகக்கவசம் கட்டாயம்

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.05

சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் இனம் காணப்பட்டுள்ள நிலையில் போக்குவரத்து அமைச்சு இன்று முதல் பயணிகள் போக்குவரத்து நடைமுறைகளில் பின்பற்றப்பட வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

அதற்கிணங்க பயணிகள் முகக்கவசம் அணிவது கண்டிப்பானது எனபோக்கு வரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க பயணிகள் போக்குவரத்து பஸ்களில் அனைத்துப் பயணிகளும் சாரதியும் நடத்துநரும் முகக் கவசம் அணிய வேண்டும் என்றும் பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அத்துடன் ரயில் பயணிகள் ரயில் நிலையங்களுக்குள் பிரவேசிக்கும் முன்பாகக் கைகளை கழுவுவது, முகக் கவசங்கள் அணிவது மற்றும் சமூக இடைவெளியை பேணுவது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சேவையில் உள்ள அனைத்து அரச மற் றும் தனியார் பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைய மாத்திரமே பயணிகள் பயணிக்க முடியும்.

பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற திட்டம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் கொரோனா வைரஸ் தொற்று அச்சம் குறைவடைந்ததைத் தொடர்ந்து, அதனைப் பெரிதளவில் நடைமுறைப்படுத்தவில்லை. இந்த நிலையில், உடன் அமுலுக்கு வரும் வரையில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. - என்றார்.

# திவுலப்பிட்டிய மாணவிக்குக் கொரோனா: 1,500 மாணவர்கள் சுயதனிமைப்படுத்தல்!

கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டிய பிரதேசத்தில் தாயும் அவரது மகளான 16 வயது மாணவியும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், குறித்த மாணவி கல்வி கற்கும் பாடசாலையின் 1,500 மாணவர்கள் அவர்களது வீடுகளில் கட்டாய சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் திவுலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

மேற்படி பாடசாலையில் கற்கும் திவுலுப் பிட்டிய பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களைத் தனிமைப்படுத்துவதற்காக இன்று நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அவர் மேலும் கூறினார்.

# யாழில் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும்

## மாகாண சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன்

யாழ்ப்பாணத்தில் நேற்று (திங்கட்கிழமை) முதல் சுகாதார நடைமுறைகள், மிகவும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதற்காக பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் பிரிவின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று சமூக தொற்றாக மாறியுள்ளமை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் ஆ.கேதீஸ்வரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கம்பஹா மாவட்டத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய பலருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், வட மாகாணத்தில் கொரோனாத் தொற்றுப் பரம்பலைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பொதுமக்கள் கடைபிடிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.



பொது மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும். பொது இடங்களுக்கு செல்லும் போது கட்டாயமாக முகக் கவசம் அணிய வேண்டும்.

மேலும், பொது இடங்களில் இருவருக்கு இடையில் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் சமூக இடைவெளி பேணப்படவேண்டும். அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்களில் சவர்க்காரமிட்டு கை கழுவிய பின்பே உள்ளே செல்ல வேண்டும். அத்துடன் வீட்டுக்குத் திரும்பிய பின்பும் கைகளை சவர்க்காரமிட்டு கை கழுவிய பின்பே வீட்டுக்கு உள்ளே செல்ல வேண்டும்

பொதுமக்கள் அவசியமான விடயங்கள் தவிர வெளியே செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவசியமற்ற விழாக்கள், ஒன்றுகூடல்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது பிற்போட வேண்டும்.

கட்டாயமாக நடாத்தப்படவேண்டிய நிகழ்வுகளில் சுகாதார, பாதுகாப்பு நடைமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்பட வேண்டும்.

பொதுப்போக்குவரத்து வாகனங்களில் ஆசனங்களுக்கு ஏற்ற எண்ணிக்கையான பயணிகள் மட்டுமே ஏற்றிச் செல்லப்படுவதுடன் அனைவரும் முககவசம் அணிவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் ஒன்று கூடும் சந்தைகள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களிலும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் இறுக்கமாக பின்பற்றப்படவேண்டும்.

வணக்கதலங்களில், நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களின் எண்ணிக்கையுடன் நடத்தப்படுவதுடன் இதற்காக வழங்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும். – என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# வடக்கு மாகாண மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும்

## சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர்

தற்போதுள்ள கொரோனா சமூகத் தொற்று தொடர்பில் வடக்கு மாகாண மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரெட்ண அவசர கோரிக்கை விடுத்துள்ளார்

தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்று (திங்கட்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரைக்கும் இரண்டு விதமான அபாயங்கள் காணப்படுகின்றன. எமது அண்மை நாடான இந்தியாவில் கொரோனா தொற்று மிகவும் அதிகளவில் காணப்படுகின்றது. எனவே இந்திய மீனவர்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர் ஊடாக வடக்கு மாகாணத்தில் கொரோனா பரவக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன. அதேபோல் வடக்கு மாகாணத்துக்கு ஏனைய மாகாணங்களில் இருந்து வருபவர்களிலிருந்து கொரோனா தொற்றக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன

எனவே இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண மக்கள் மிகவும் அவதானமாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருவோர் தொடர்பில் மிகவும் அவதானமாகச் செயற்படுங்கள். குறிப்பாக நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது கட்டாயமாக முகக் கவசத்தை அணிந்து செல்லுங்கள் . ஏற்கனவே சுகாதார அமைச்சால் சுகாதார நடைமுறைகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓரிரு மாதங்களுக்கு முன்னர் நீங்கள் இந்த விடயங்களைக் கடைபிடித்தீர்கள். அந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்து வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டியது வடக்கு மாகாணத்தில் உள்ள பொதுமக்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

பொது இடங்களில் ஒன்றுகூடாதீர்கள். அநாவசியமாக வீதிகளில் பயணிப்பதைத் தவிருங்கள். யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களில் கொரோனாத் தொற்று ஏற்படாவண்ணம் பாதுகாப்பதற்கு அனைத்து வடக்கு மாகாண மக்களும் இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். – என சஞ்சீவ தர்மரெட்ணம் மேலும் தெரிவித்தார்.

# மீண்டும் முடக்கப்படுமா இலங்கை? தொற்றுநோய் பணிப்பாளர் விளக்கம்!

நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்படுமா என்பது தொடர்பாக எதிர்வரும் தினங்களில் காணப்படும் நிலைவரங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் என தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கம்பஹா – திவுலப்பிட்டி பிரதேசத்தில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட பெண்ணுடன் தொடர்புகளைப் பேணியவர்களில் 69 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று (திங்கட்கிழமை) உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆடை தொழிற்சாலையில் அந்தப் பெண்ணுடன் தொழில் புரிந்தவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்டு வரும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் நாள்களில் காணப்படும் நிலைவரங்களின் அடிப்படையிலேயே நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்படுமா என்பது தொடர்பாகத் தீர்மானங்கள் எடுக்கப்படும் என வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவை மத்தி பிரிக்க எதிர்ப்பு!

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உள்ள புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உளநல சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை மட்டும் பிரித்து யாழ்.போதனா வைத்தியசாலையுடன் இணைப்பதற்கு தாம் ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம். தமது பலத்த எதிர்ப்பை வலியுறுத்துவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அழைப்பை ஏற்று நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு விஜயஞ்செய்து பல்வேறு விடயங்கள் தொடர் பாகக் கலந்துரையாடினார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தனது தலைமையுரையில் –

அரசியல் உள்நோக்கம் கொண்ட ஒரு நிறுவனத்தின் நிர்வாகியும் ஒரு சிலரும் தங்களது சுயநல நோக்குக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையைக் கூறுபோட்டு, ஒன்றுமில்லாமல் செய்யும் முயற்சியாக இந்த இரு பிரிவுகளையும் போதனா வைத்தியசாலையுடன் இணைப்பதற்கான முயற்சி திரைமறைவில் அரங்கேறுகின்றது. இது எமது வடக்கு – கிழக்கு மக்களுக்குப் பெரிய பாதிப்பாகும். இந்த விடயம் தொடர்பில் எமது நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுச்சபை கூடி கட்சிபேதமின்றி எமது சகல மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்து இந்தவிடயத்தை அவர்களுக்கு எடுத்துரைப்பது என்று முடிவுசெய்தோம். அந்தவகையில் நேற்று முதலாவதாக தங்களை அழைத்துள்ளோம் – என்றும் குறிப்பிட்டு இது தொடர்பான பின்னணி மற்றும் முழு விவரங்களையும் விளக்கினார்.



கூட்டத்தின் இறுதியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை எமது வடக்கு மாகாண மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம். இந்த வைத்தியசாலையில் இருக்கின்ற புற்றுநோய், உளநலம் ஆகிய இரு பிரிவுகளை மட்டும் பிரித்து மத்தி எடுப்பதற்கு நாம் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டோம்.

தெல்லிப்பழை வைத்தியசாலையைத் தரமுயர்த்துவதற்கான ஏற்பாடுகளை நாம் நிச்சயம் ஆற்றுவோம். மத்திய அரசினூடாக மாகாணத்துக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கென விசேடமான முறையில் நிதி ஏற்பாடுகள் ஏதாவது செய்யமுடியுமா என்று ஆராய்வோம். ஆவ்வாறு செய்ய முடியுமாயின் நாம் நிச்சயமாகச் செய்வோம். தெல்லிப்பழை வைத்தியசாலையை கூறுபோட விடாமல் தனித்துவமான ஒரு வைத்தியசாலையாக தனியானதொரு நிர்வாகியின் கீழ் இதனை தரமுயர்த்துவதற்கான ஏற்பாடுகளை நாம் நிச்சயம் மேற்கொள்வோம். – என்றார்.

இந்தக் கூட்டத்தில் வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர்களான ந.காண்டீபன், க.சுகாஷ் மற்றும் வைத்தியர் சங்கப் பிரதிநிதிகள், தாதியர் சங்கப் பிரதிநிதிகள், வலி.வடக்கிலுள்ள பாடசாலை அதிபர்கள், நோயாளர் நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# புங்குடுதீவு யுவதிக்குக் கொரோனா

திவுலப்பிட்டிய ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த பின்னர் யாழ்ப்பாணம் புங்குடுதீவுக்கு திரும்பிய இரண்டு பெண்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றமை நேற்று வைத்தியபரிசோதனையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதனை அடுத்து அவரைத் தனிமைப்படுத்தி சிகிச்சைக்கு அனுப்பி வைக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் 83பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் வடமராட்சி கிழக்கில் தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபட்ட 72 மீனவர்கள், இந்தியப் படகில் ஏறிய 09 மீனவர்கள் மற்றும் ஆடைத் தொழிற்சாலையில் இருந்து புங்குடுதீவுக்குத் திரும்பிய இரண்டு யுவதிகள் அடங்குவர். இவர்களில் ஒரு யுவதிக்கு மட்டும் தொற்று இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# மூதூரில் காணி அபகரிப்பு தடுக்கமுற்பட்டதால் பதற்றம்!





(எப்.முபாரக்)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி, மூதூர் 64 ஆம் கட்டை பகுதியிலுள்ள காணிகளை அளப்பதற்கு நில அளவையாளர்கள் நேற்று திங்கட்கிழமை (05) வருகை தந்த போது பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமையால் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 64 ஆம் கட்டை குட்டியாராம விஹாரைக்கு அருகிலுள்ள காணிகளை அளப்பதற்கு முயற்சித்தபோதே பதட்ட நிலைமை உருவானது.

காணிகளை அளக்கும் போது மேற்படி விஹாரைக்கு அருகே உள்ள சிறுபான்மை மக்களுடைய காணிகளும் உள்வாங்கப்பட்டன எனவும் அதனால் பொதுமக்களின் காணிகள் விஹாரைக்குச் சொந்தமாக்கப்படுவதாகவும் அதனைத் தடுக்கும் முகமாக அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, குட்டியாராம விகாரைக்கு அருகில் அதிகளவில் சிறுபான்மை மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என அவர்களுக்குச் சொந்தமான காணிகள் அப்பகுதியில் இருக்கின்றன எனவும் நில அளவையாளர்கள் விஹாரையை நில அளவை செய்வதனூடாக பொதுமக்களுடைய காணிகளும் பெறப்படுமென மக்கள் சுட்டிக்காட்டினர். அக்காணிகளை மீட்பதற்காக தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

நில அளவையாளர்கள் அப்பகுதியைச் சுற்றி அளக்க முற்பட்ட போதும் பொதுமக்களுக்கும் நில அளவையாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். தொல்பொருள் திணைக்களத்தில் பணிபுரியும் பெண் தனிமைப்படுத்தலில்!

யாழ்ப்பாணம் - நாவலர் வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்தில் பணிபுரியும் பெண்ணொருவரை தனிமைப்படுத்த சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பெண்ணின் தாயார், திவுலப்பிடியவில் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட பெண் பணிபுரிந்த ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையிலேயே அந்தப் பணியாளரின் தாய் மற்றும் உறவினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து இவரை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள தொல்பொருள் திணைக்களத்தில் பணிபுரியும் அந்தப் பெண், கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது நண்பருடன் யாழ்ப்பாணம் சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே அவரையும் கோட்டை பகுதியில் பணிபுரியும் அவரது நண்பரையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தனிமைப்படுத்தும் நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# யாழ்.மாவட்ட அரச அதிபரைச் சந்தித்தார் பலாலி படைகளின் கட்டளைத் தளபதி!



யாழ்ப்பாணம் - பலாலி கட்டளைத் தலைமையகத்திற்கு உட்பட்ட இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக புதிதாகப் பதவியேற்றுள்ள பிரிகேடியர் சுமித் பிறேமலால், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரை நேற்று (திங்கட்கிழமை) சந்தித்திருந்தார்

இந்தச் சந்திப்பின்போது யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்ததோடு யாழ்ப்பாண மாவட்டத்தில் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராய்ந்தனர். மேலும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலைமையை யாழ்ப்பாணத்தில் எவ்வாறு எதிர்நோக்குவது, சமூக தொற்று ஏற்படாமல் எவ்வாறு தடுப்பது போன்ற விடயங்கள் தொடர்பிலும் இருவரும் ஆராய்ந்தனர்

ஏற்கனவே 51 ஆவது கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றியவரின் சேவைக்காலம் முடிவடைந்து, ஓய்வு பெற்று சென்றதன் பின்னர் புதிதாக பதவியேற்ற 51ஆவது கட்டளைத் தளபதி நேற்று அரச அதிபரை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

இந்தச் சந்திப்பின் போது யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், இராணுவத்தின் 512 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மற்றும் 51ஆவது படைப்பிரிவின் இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்


## மணமகள் தேவை

1977, யாழிந்து(V), ஹஸ்தம், France Citizen துணை இழந்த மணமகன் (Profile 4723). விபரங்களுக்கு இணைய வழி திருமணசேவை www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Bambalapity, Colombo 04. அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும் பிலுண்டு (வேறுளங்கும்கிளைகள்கிடையாது). காலவரையறையின்றி, இடைத்தரகரின்றி மணமக்களுடன் இணையத்தளத்தினுடாக தொடர்புகொள்ளுங்கள். அழையுங்கள் 076 664 9401.

## கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி – 13.08.1979
மதம் – இந்து V
நட்சத்திரம் – அச்சுவினி
பாவம் – 36 1/2
செவ்வாய் – 7இல் 8 புள்ளி
கல்வி – A/L
தொழில் – தனியார் கம்பனி விநியோகஸ்தர்
எதிர்பார்ப்பு – சாதாரண குடும்பப் பெண்

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி – 05.06.1976
மதம் – இந்து V
நட்சத்திரம் – ரோகினி
பாவம் – 63
செவ்வாய் – 7இல்
கல்வி – A/L
தொழில்–நூலக உத்தியோகம்
எதிர்பார்ப்பு – அரசாங்க உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528


# உரிய திகதிகளில் பரீட்சைகளை நடத்துவதில் அரசுக்குச் சிக்கல்!

## பிற்போடத் தீர்மானம்

கொழும்பு, ஒக்.06

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியன திட்டமிட்ட திகதிகளில் நடைபெறுமா அல்லது பிற்போடப்படுமா என்பது தொடர்பில் நேற்று அல்லது இன்றைக்குள் உரிய அறிவிப்பு விடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன் மாணவர்களின் சுகாதார நலனைக் கருத்தில்கொண்டே அரசு எந்தவொரு முடிவையும் எடுக்கும் எனவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
• பிரான்ஸ் • ஜெர்மனி
• டென்மார்க்
• நெதர்லாந்து
• இத்தாலி
• சுவிஸ்
1150/= Kg



எமது நேரடிக்கிளைகள்
0768226240


# நோய்த்தாக்கம் அதிகரித்தால் நாடெங்கும் ஊரடங்கு அமுல்!

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.06

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பொலிஸ் ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுமா என்ற கேள்விக்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று பதிலளித்துள்ளார். இதன்போது அவர் கூறியதாவது:-

நாட்டில் மூன்று பொலிஸ் பிரிவுகளுக்குத்தான் பொலிஸ் ஊரடங்குச் சட்டம்பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளுக்கு ஊரடங்கு உத்தரவைப் பிறப்பிக்கும் எண்ணம் தற்போது இல்லை. எனினும், கொரோனா வைரஸ் நோய்த்தாக்கம் அதிகரித்தால் நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்படும். திங்கள் இரவுக்குள் அது பற்றி தீர்மானம் எடுக்கப்படும். - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2020 இல் வெளியிடப்பெற்றது.